DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

BIG
Great Coverage.
BIG Savings.
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1454 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 16, 2024

## Canadian High Commissioner in Sri Lanka, Eric Walsh meets New Leader of Tamil Federal Party, Mr. Sritharan

# இலங்கைக்கான கனேடியத் தூதுவருடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன் மற்றும் சாள்ஸ் சந்திப்பு!



இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் அழைப்பின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் 13-02-2024 தினம் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் அவர்களை, கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் கனேடியத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் டானியல் வூட், அரசியல் அலுவலர் கணேசநாதன் சாகித்தியனன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு-செய்யப்பட்டமைக்காக சிறீதரன் எம்.பிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த தூதுவர், ஈழத்தமிழர்களின் அரசியல் நலன்சார்ந்து முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளுக்கு தம்மாலான பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரனுடன் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய வெற்றிகரமான கலந்துரையாடல்



யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரனுடன் கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய கலந்துரையாடல் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. மேற்படி கலந்துரையாடலை நேர்த்தியாக நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று கனடாவில் வாழ்ந்த வண்ணம் பல்வேறு மருத்துவம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களுக்கான பழைய மாணவர் சங்கமானது மிகுந்த ஒத்துழைப்பை வழங்கியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி **M.** மயிலாசனும் அவரது அமைபபும் , இந்நிகழ்வு சிறப்புறவும் பயனுள்ள வகையிலும் இடம்பெற தங்கள் ஒத்துழைப்பை வழங்கினர். அமைப்பின் அங்கத்தவர்கள் பலரும் அங்கு கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டு. யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் வளர்ச்சிக்கு தங்களால் ஆன உதவிகளைச் செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)




Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்,
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
மண்டபம்:- The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 14-02-2024 இரவு யாழ்ப்பாணம் -இனுவில் பகுதியில் இடம்பெற்ற கோர ரயில் விபத்தில் தந்தையும் 3 மாத குழந்தையும் உயிரிழந்துள்ளனர்





அனுராதபுரத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த ரயில், தண்டவாளத்தை கடக்க முற்பட்ட ஹையேஸ் வாகனத்தை மோதியது.

குறித்த விபத்தில் கணவன், மனைவி, 3 மாதங்கள் நிரம்பிய மகள் என மூவர் சிக்கினர்.

இந்நிலையில் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை உயிரிழந்தது. மனைவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பாதுகாப்பற்ற புகையிரத கடவை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தானது ஒட்டுமொத்த இலங்கையையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஆனந்தராசா சயந்தன் (வயது: 32), சயந்தன் அக்ஷரா (வயது - மூன்று மாதங்கள்) ஆகியோர் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். சயந்தன் பிரியங்கா (வயது 22) என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் அவசர சிகிச்சைக்கு பின், சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகே புகையிரத கடவையில் அதிகரிக்கும் விபத்துகள்!

(15-02-2024)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் காணப்படும் புகையிரத பாதுகாப்பு கடவையில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாது பயணம் செய்வதினால் தினசரி விபத்துக்கள் அதிகரித்த வண்ணமே உள்ளது.

வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகே காணப்படும் புகையிரத பாதுகாப்பு கடவையின் கதவுகள் மூடப்பட்டு இருக்கும் சமயத்தில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடை முறைகளை பின்பற்றாது பாதையின் இரு பக்கங்களிலும் சீரற்ற முறையில் வாகனங்களை தரித்து வைத்தல், புகையிரத பாதுகாப்பு கடவை மூடப்பட்டிருக்கும் சமயத்தில் வாகனத்தினை செலுத்துதல், புகையிரத கடவை திறந்தவுடன் எதிர்த்திசையில் வருகின்ற வாகனத்திற்கு வழி விடாது செல்லுதல் போன்ற செயற் பாடுகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.





இதன் காரணமாக புகையிரத நிலைய வீதியில் தினசரி இரண்டிற்கு மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன் சில சமயங்களில் மாத்திரமே பொலிஸார் குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தமிழ் அதிகாரிகள் மாத்திரம் சுற்று நிருபத்தை கடைப்பிடிக்கின்றனர். சிங்கள உத்தியோகத்தர்கள் அப்படியல்ல

## விவசாயிகள் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் முறைப்பாடு

தமிழ் அதிகாரிகள் மாத்திரம் சுற்று நிருபத்தை கடைப்பிடிக்கின்றனர் எனவும், சிங்கள உத்தியோகத்தர்கள் சுற்று நிருபத்தை கடந்து மனிதாபிமானத்துடன் 2018ம் ஆண்டு அழிவு பெற்று தந்தனர் என குறிப்பிட்ட விவசாயிகள், விவசாயத்தில் ஏற்பட்ட நட்டத்திற்கு திருப்திகரமான தீர்வில்லை என விவசாயிகள் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

தமது செய்கைக்கு ஏற்பட்ட செலவு அதிகமாக உள்ளது. ஆனால் காப்புறுதி கொடுப்பனவு திருப்திகரமானதாக இல்லை. விவசாய காப்புறுதி நிறுவனம் செய்கையை மூன்று கட்டமாக மதிப்பீடு செய்துள்ளனர். மழை வெள்ளம் காரணமாகவே அழிவு ஏற்பட்டது. ஆனால், அதற்கு ஏற்ற இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து எமது கடித்திற்கான பதில் கிடைத்துள்ளது.

நாங்கள் இது தொடர்பாக மீண்டும் கடிதம் அனுப்ப உள்ளோம் என இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் சிவமோகன் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் விவசாய காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதி குறிப்பிடுகையில், பயிர் அழிவு தொடர்பில் முழுமையான அழிவுக்கு 40,000 மட்டுமே வழங்கும் வகையில் சுற்று நிருபம் உள்ளது. அதற்கு அமைவாகவே நாம் வழங்க முடியும்.

செய்கை மேற்கொள்ள அதிக செலவுகள் விவசாயிகளுக்கு ஏற்படும். அதற்காக மேலதிக காப்புறுதியை விவசாயிகள் கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக பெற வேண்டும்.

இதுவரை விவசாயிகளிடமிருந்து 400 ரூபா காப்புறுதி பணம் பெறப்படுகிறது. மிகுதியை அரசாங்கம் காப்புறுதிக்காக செலுத்துகிறது. மேலதிக காப்புறுதியை விவசாயிகளே செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு அதிக இழப்பீடுகளை வழங்கி அவர்களுக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்தக் கூடாது. கடந்த காலத்தில் அவ்வாறு அதிக தொகை வழங்கப்பட்டதால் அதனையே விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர் என தெரிவித்தார்.

இதன்போது பதில் அளித்த சிவமோகன், 2018ம் ஆண்டு எமக்கான இழப்பீடு முழுமையாக வழங்கப்பட்டது. வெளியிலிருந்து வந்த சிங்கள உத்தியோகத்தர்கள் சுற்று நிருபத்துக்கு மேலாக மனச்சாட்சியுடன் நட்டயீட்டுக்கு சிபாரிசு வழங்கினர்.

ஆனால் இங்குள்ள தமிழ் உத்தியோகத்தர்கள் சுற்று நிருபத்தை முறையாக பின்பற்றுபவர்களாகவே உள்ளனர் என தெரிவித்தார். குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய தீர்வை பெற்று தர வேண்டும் எனவும் அமைச்சரிடம் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் விவசாயிகளுடன் பேசி ஜனாதிபதிக்கு பதில் அனுப்புவதுடன், தமக்கும் கடிதம் ஊடாக வழங்குமாறும் தெரிவித்தார். இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அமைச்சருடன் பேசுவதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# ArriveCan செயலியை உருவாக்க 60 மில்லியன் டாலர்களைப் பெற்ற அரசாங்க ஒப்பந்த நிறுவனம் தொடர்பாக கனடிய பாராளுமன்றத்தில் தொடர்ச்சியான விவாதம்

கடந்த சில மாதங்களாக கனடாவின் மத்திய அரசு மட்டத்தில் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக பேசு பொருளாகவும் பாராளுமன்ற அமர்வுகளில் விவாதப் பொருளாகவும் உள்ள **ArriveCan** செயலியை உருவாக்க 60 மில்லியன் டாலர்களைப் பெற்ற அரசாங்க ஒப்பந்தக்காரர் ஒருவர் லிபரல் அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து மொத்தம் 258 மில்லியன் டாலர்களை மத்திய அரசின் ஒப்பந்தங்களில் பெற்றுள்ளார் என கனடாவின் கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட விசாணைக்குழுவின் முன்னார் சாட்சியம் அளிக்கும் போது தெரிவித்துள்ளார்






இந்த யுசசளைநஊயெ மோசடி தொடர்பாக அண்மைக்காலமாக பல விடயங்கள் வெளியில் வந்துள்ள நிலையில் கனடாவின் கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் பல விபரங்களை பகிர்ந்துள்ளார்.

கனடாவின் மத்திய எதிர்க்கட்சியாக விளங்கும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் உட்பட பல உறுப்பினர்கள் கடந்த காலத்தின் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும், இவ்வாறான ஒப்பந்தங்களுக்கு செலுத்தப்படும் ஒவ்வொரு டாலரையும் விசாரிக்க கனடாவின் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

கோவிட்- 19 அதிக வீச்சுடன் இருந்த காலத்தில் இந்த யுசசளைநஊயெ என்னும் செயலியை கனடிய அரசாங்கம் அவசியம் எனக்கருதி அதனை அமுலுக்கு கொண்டு வர தீர்மானித்தது. தற்போது இந்த ஒப்பந்த விவகாரத்தில் பல மில்லியன் டாலர்கள் மோசடி நடைபெற்றுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனை கனடாவின் கணக்காய்வாளர் நாயகம் அறிவித்ததைத் தொடர்ந்து கனடாவின் எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பாராளுமன்றத்தில் பிரதமரை நோக்கி கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருந்தார்.

.

கடந்த சில நாட்களாக வெளியிடப்பட்டுவரும் அறிக்கைகளின் பிரகாரம் மத்திய அரசோடு ஒப்பந்தங்கள் செய்திருந்த **GC Strategies** என்னும் நிறுவனமானது சுமார் 140 மத்திய அரசாங்கத்தின் ஒப்பந்தங்களை 2015ல் இருந்து மொத்தம் **$**258 மில்லியனை அபகரித்துள்ளது என்றும் . இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் மீண்டும் மதிப்பாய்வு செய்யப்படும் என்று கனடாவின் பொது சேவைகள் மற்றும் கொள்முதல் திணைக்களம் அறிவித்தது.

இவ்வாறிருக்க. கனடாவின் கணக்காய்வாளரம் நாயகம் கரேன் ஹோகன் அவர்கள் கடந்த திங்களன்று ஒரு அறிக்கையை வெளியிட்டார்,

அதில் **ArriveCan** இன் விலை மதிப்பிடப்பட்ட கூ59.5 மில்லியனாக இருந்தது,

இந்த செயலியின் விலை ஆரம்பத்தில் கூ80,000 மட்டுமே என்று கூறப்பட்டது.

மேலும் இந்த ஒப்பந்தங்களில் ஏறக்குறைய அரைவாசியானது கனடா எல்லை சேவைகள் திணைக்களத்தினால் புஊ உத்திகளுக்கு வழங்கப்பட்டது. ஒப்பந்தங்களில் நாற்பத்தாறு ஒப்பந்தங்கள் ஒப்பந்தங்கள் விலை கோராமலேயே ***GC Strategies*** நிறுவனத்திற்கு அவர்கள் சமர்ப்பித்த விலைகளுக்கு வழங்கப்பட்டன.

பின்னர் விசாரணைகளைத் தொடர்ந்து இரண்டு நபர்களைக் கொண்ட ஐடி நிறுவனம் உண்மையான தகவல் தொழில்நுட்பப் பணிகளைச் செய்யவில்லை என்றும் ஆனால் அரசாங்க ஒப்பந்தங்களில் கூ250 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது என்று கூறினார். **ArriveCan** உடன், **GC** உத்திகள் ஒப்பந்தத்தைப் பெற்றன, ஆனால் மற்றவர்களுக்கு ஒப்பந்தப் பணியை தங்களுக்கு கீழ் ஒப்பந்தம் செய்தது.

“ஒரு புறநகர் அடித்தளத்தில் செயல்படும் இரண்டு நபர்களைக் கொண்ட நிறுவனம், மத்திய அரசாங்கத்துடன் கூ250 மில்லியன் வணிகம் செய்ய முடியும் என்பது காரணத்திற்கு அப்பாற்பட்டது. எனவே இன்று, அதனால்தான் தங்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு டாலரையும் விசாரிக்க கணக்காய்வாளர் நாயகத்தை அழைக்கிறோம், ”என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினாரகள்.

கன்சர்வேடிவ் எம்.பி கார்னெட் ஜெனுயிஸ், தனது உரையில் கணக்காய்வாளர் நாயகம் ஹோகனின் அறிக்கை ட்ரூடோ அரசாங்கத்திற்கும் ஜி.சி ஸ்ட்ராடஜீஸ் ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையே உள்ள நெருக்கமான உறவைக் காட்டுகிறது என்றார்.

யுசசளைநஊயெ உண்மையில் என்ன செலவாகும் என்பதை மதிப்பிட முயற்சிக்கும் போது, பல வருடங்களில் தான் பார்த்த மிக மோசமான புத்தக பராமரிப்பு என்று கூறியதால் தான் குழப்பமடைந்ததாக கணக்காய்வாளர் நாயகம் ஹோகன் கூறினார்.

அவர் இந்த மோசடி தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்”விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளின் சில அடிப்படை மற்றும் அடிப்படைக் கொள்கைகளுக்கு இதுபோன்ற வெளிப்படையான புறக்கணிப்பு இருப்பதை நான் கண்ட முதல் எடுத்துக்காட்டு இதுவாகும்,” என்று அவர் கூறினார்.

கன்சர்வேடிவ் தலைவர் **Pierre Poilievre, ArriveCan** மீதான குற்றவியல் விசாரணையை தொடர்ந்து நடத்தும் வகையில் கனடாவின் றோயல் கனடியன் மவுன்ட் பொலிசாருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்வாறிருக்கையில். எதிர்க்கட்சித் தலைவர் **Poilievre** செவ்வாயன்று பத்திரிகையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கையில் தனது கட்சி இரண்டு நாடாளுமன்றக் குழுக்கள், பொதுக் கணக்குக் குழு மற்றும் அரசாங்க செயல்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் குழு ஆகியவற்றைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறினார்.

**ArriveCan** ஊழலின் மையமாக இருக்கும் மற்றும் ஒட்டாவாவின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் அடித்தளத்தில் முகவரியைக் கொண்டு இரண்டு ஊழியர்களைக் மட்டுமே கொண்ட ஒரு நிறுவனம், ஒப்பந்தங்களில் பில்லியன் கணக்கான டாலர்களைப் பெற்றது. எப்படி என்று கேள்வியை முன்வைத்து இது அர்த்தமில்லை. ஏதோ குழப்பம் இருக்கிறது. இரகசியங்கள் உள்ளன. எங்களுக்கு உண்மை தேவை. ஊழல் முன்னெப்போதையும் விடதற்போது பெரிதாகிவிட்டது ”என்றும் கன்சர்வேடிவ் தலைவர் *Pierre Poilievre* கவலையுடன் தெரிவித்தார்.

தற்போது இந்த நிதி மோசடி மற்றும் ஏமாற்றுதல் ஆகியவை தொடர்பாக கனடாவின் தேசிய ஊடகங்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்து வருவதை அறியக்கூடியதாக உள்ளது.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# கனடாவிலும் மக்கள் வரிப்பணத்தின் பெரும்பகுதி ‘முதலைகளினால்' விழுக்கப்படுவது கவலையளிக்கின்றது

கனடா ஒரு குளிர்நாடாக இருந்தாலும் இங்குள்ள பொருளாதார வளங்கள் மற்றும் பல்கலாச்சாரக் கொள்கைகள் ஆகியன . வெளிநாட்டவரையும் இங்கு வந்து குடியேறி தங்கள் வாழ்க்கையைத் தொடரும் வகையில் வாய்ப்புக்களை வழங்கும் நாடாக விளங்குகின்றது.

உலகின் ஊழல் இல்லாத தேசங்களே இல்லை என்று சொல்லுகின்ற நிலை இருந்தாலும் கனடாவில் உள்ள பல்கலாச்சாரக் கொள்கை மற்றும் ஏனைய மொழிகளுக்கு வழங்கப்படுகின்ற சுதந்திரம் ஆகியன அனைவரும் விரும்புகின்ற தேசமாக ஒளி வீசுவதை நாம் அனைவரும் கண்டு மகிழ்கின்றோம்.

மக்களிடமிருந்து அறிவிடப்படும் பெருந்தொகையான வரிமூலமான நிதியும் பெருந்தேசிய நிறுவனங்கள் மற்றும் வர்த்தகத்துறையில் இயங்கிவரும் நிறுவனங்கள் ஆகியன செலுத்து பெருந்தொகையான வரியுமான கனடாவின் வரியின் வாயிலாக கிடைக்கும் வருமானம் என்பது மிகவும் அளவுக்கு அதிகமானது.

ஆனாலும் கனடிய அரசானது அதன் கீழ் வரும் பல திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் மூலமாக மக்கள் நலன் பேணும் அவசியமான பல திட்டங்களுக்கு நிதி வழங்கி மக்கள் வாழ்க்கை முறை சீராக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்கின்றது.

ஆனாலும் அரசாங்கம் சார்ந்த ஒப்பந்தங்கள் மற்றும் வீதி அமைப்பு மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு நிதி வழங்குதல் போன்றவற்றில் நிதி மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அறியும் போது மனதிற்கு வேதனையளிக்கின்றது.

தேசத்தின் பிரதமரோ அன்றி அமைச்சர்களோ அறிந்து கொள்ளாமலே நிதி மோசடிகளும் ஊழல்களும் இடம்பெறுகின்றன என்கின்ற வெளிவருகின்றபோது அரசாங்கத்தின் கணக்காய்வாய்வாளர் அலுவலகம் தகுந்த முறையில் பணியாற்றி அந்த ஊழல்வாதிகளை கண்டு பிடிக்க முயற்சி எடுத்து வருகின்றுத. இந்த விசாரணைகளில் எதிர்க்கட்சிகளின் பங்கும் மிக அவசியாகிவிட்டது.

இந்த வகையில் தற்போது கனடாவில் ‘எரியும் பிரச்சனையாக' உள்ள
யுசசளைநஊயுெ மோசடியானது பெருந்தொகையான டாலர்களை விழுங்கிவிட்டது என்பதைக் அறிந்து பொது மக்களும் தேசிய ஊடகங்களும் தேசிய அரசியல்வாதிகளும் குமுறுகின்றனர். இந்த விடயத்தில் இனம் சார்ந்த ஊடகம் என்ற வகையில் கனடா உதயன் பத்திரிகை ஆசிரிய பீடமும் எழுத்து வடிவிலான தனது குரை இங்கு பதிவு செய்ய முனைந்திருக்கின்றது.

# சமகி ஜன பலவேகய என்னும் சஜித் பிரேமதாச அணியுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி செய்துகொண்டது, சமூகநீதி உடன்பாடாகும்

## இது தேர்தல் ஒப்பந்தம் அல்ல, என்கிறார் மனோ கணேசன்



“நாட்கூலி தொழிலாளர் என்ற தாழ்நிலை நிலையில் இருந்து, பெருந்தோட்ட மக்களை நிலவுரிமை கொண்ட தொழில் முனைவோராக மாற்றுவோம்” என சமகி ஜன பலவேகய என்னும் சஜித் பிரேமதாச அணியின் தலைவர் மீண்டும் ஒருமுறை பகிரங்கமாக கூறி எம்முடன் உடன்பாட்டில் கையெழுத்து இட்டுள்ளார். இது எமது தமுகூவின் தூரநோக்கு சிந்தனையின் வெற்றி.

சஜித் பிரேமதாச அணியின் அரசு உருவாகுமானால், அப்போது, எமது மக்கள் தொடர்பாக முன்னெடுக்ககூடிய நலவுரிமை திட்டங்கள் என்ன, என்பதுபற்றிய எழுத்து மூலமான உள்ளக சமூகநீதி உடன்பாடு இதுவாகும். இது தேர்தல் ஒப்பந்தம் அல்ல. தேர்தல் ஒப்பந்தம், தேர்தல் வரும்போது வரும்.

தேசிய அளவில் நடந்துள்ள இந்நிகழ்வு பற்றி கேள்வி எழுப்பும், ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஐதேக கூட்டணி, அனுரகுமாரவின் என்பிபி கூட்டணி, தரப்புகளுக்கு எமது இந்த சமூகநீதி உடன்பாடு விபரங்களை அனுப்பி வைக்க நாம் தயார். அவர்களது பதில் நிலைப்பாடுகள் என்ன என அவர்கள் எமக்கு அறிவித்தால் அவை பற்றியும் கலந்தாலோசிக்க நாம் தயார். ரணிலும், அனுரவும் தயாரா? என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

இந்நாட்டில் வாழும் 15 இலட்சம், மலையக தமிழ் மக்கள் என்ற இன அடையாளத்துக்குள், சரிபாதி ஜனத்தொகை இன்னமும் பெருந்தோட்டங்களில் வாழ்கிறார்கள். இந்நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும் போது, இந்த பெருந்தோட்ட மக்கள், சமூக பொருளாதார வளர்ச்சியில் இந்நாட்டிலேயே பின்தங்கியவர்கள்.

இதற்கு காரணம், மலைநாட்டு அரசியல்வாதிகள் மட்டுமே என்ற கவர்ச்சிக்கரமான பிரசாரம் முன்னேடுக்கப்படுகிறது. இது வரலாற்றை திட்டமிட்டு மூடி மறைக்கும் சூழ்ச்சி. இந்த கண்ணாம்பூச்சி கவர்ச்சி கதையில் நாம் மயங்கி விடக்கூடாது. மலைநாட்டு அரசியல்வாதிகள் மீது பெரும் குற்றச்சாட்டுகள் உள்ளன. அவற்றில் உண்மைகளும் உள்ளன. ஆனால், எமது மக்களின் குறை வளர்ச்சிக்கு முதல் மூன்று காரணங்கள், பேரினவாதம், இந்திய அரசு, இங்கிலாந்து அரசு ஆகியவை ஆகும்.

சுதந்திரம் பெற்றவுடன் எமது குடியுரிமை, வாக்குரிமைகளை பறித்து எமக்கு இன்று காணி, கல்வி, சுகாதாரம் ஆகிய உரிமைகள் முழுமையாக இல்லாமல், எம்மை பெருந்தோட்ட அமைப்புக்குள்ளே இரண்டாந்தர பிரஜைகளாக வைத்திருப்பது, பேரினவாதம் ஆகும். எம்மை கேட்காமலே, எம்மில் பெரும்பான்மையோரை நாடு கடத்தி, எம்மை அரசியல்ரீதியாக பலவீனப்படுத்தியது, இந்திய அரசு ஆகும். எம்மை இங்கே அழைத்து வந்து, எமது உழைப்பில் நன்கு சம்பாதித்து விட்டு, எம்மை அம்போ என விட்டு ஓடியது, இங்கிலாந்து அரசு ஆகும். இந்த வரலாற்றால், ஏற்பட்டுள்ள, தாழ்நிலைமைகளில் இருந்து வெளியே வருவது சுலபமான காரியம் அல்ல.

இந்த மூன்றுக்கும் பிறகுதான், மலைநாட்டு அரசியல் கட்சிகளின் பொறுப்பு வருகிறது. அதிலும், தமிழ் முற்போக்கு கூட்டணி, எட்டு ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டு, ஒரே ஒருமுறை மட்டும் ஆட்சியில் இருந்த முற்போக்கு அரசியல் இயக்கம் ஆகும். தேசிய, சர்வதேசிய அரங்குகளில் எமது பிரச்சினைகளை காத்திரமாக எடுத்து பேசி, முன் வைத்து, தீர்வு தேடும் இயக்கம், எமது கட்சியாகும். அதன் ஒரு அங்கம்தான், “நாட்கூலி தொழிலாளர் என்ற தாழ்நிலை நிலையில் இருந்து, பெருந்தோட்ட மக்களை நிலவுரிமை கொண்ட தொழில் முனைவோராக மாற்றுவோம்” என சமகி ஜன பலவேகய அணியின் தலைவராம் சஜித் பிரேமதாசவை, மீண்டும் ஒருமுறை பகிரங்கமாக கூறவைத்து, நாம் செய்துகொண்டுள்ள சமூகநீதி உடன்பாடாகும்.




For All your Renovation Needs!
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

ROHINI TAILORS & DESIGNS
Saree Blouse, Skirt & Blouse மற்றும் மணமகளுக்கான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கான தையல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இடம்:- Pickering
தொடர்புகளுக்கு: 647 569 4794
அல்லது 416 438 2552

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# காணிகளை அன்பளிப்போர் மத்திய அரசுக்கு வழங்குவதை தவிர்த்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு அன்பளிப்பதே இனம்சார் பாதுகாப்பானது!

## நீர்வேலி தமிழ் முற்ற திறப்பு விழாவில் முன்னாள் தவிசாளர் நிரோஷ்

மக்கள்பங்கேற்புஅபிவிருத்திஎன்றஎண்ணக்கருவுடன் மக்கள் பங்களிப்பு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதிலும் அரச தாபனங்கள் சிரத்தை எடுக்குமாயின் கிராம மட்ட உட்கட்டுமானங்களை விருத்தி செய்வது இலகுவாக அமையும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோகூஷ் தெரிவித்தார்.

நீர்வேலியில் சனிக்கிழமை (10) இடம்பெற்ற தமிழ் முற்றம் மற்றும் தபாலகக் கட்டிடத் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும்,

நீர்வேலி மண் தமிழ் மக்களின் பாரம்பரியத்திற்கு உரிய மண்ணாகும். இந்த மண்ணில் தமிழ் முற்றத்தினை அமைக்க வேண்டும் என நான் தவிசாளராக பதவி வகித்த காலத்தில் அவை தீர்மானம் உள்ளிட்ட பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டேன். இந்நிலையில் ஏற்கனவே நீர்வேலியில் தபாலகத்திற்கான கட்டிடத்தினை தனது கொடையாக அமைத்து வழங்குவதற்கான செயற்றிட்டத்தினை ஆரம்பித்திருந்த தொழிலதிபர் கிருபாகரன் அவர்கள் தமிழ் முற்றத்தினை அமைத்து அதில் பெரியார்களின் சிலைகளை நிறுவும் பொறுப்பினையும் தானே முன்வந்து ஏற்றுக் கொண்டு அதனை தற்போது அவர் முழுமையாகச் செயற்படுத்தியுள்ளார். அவரது முற்போக்கான கொடை எண்ணத்திற்கும் செயற்பாட்டுக்கும் பாராட்டுக்கள்.

இதற்காக அவருடன் உழைத்த ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் குழுவினர்க்கு நன்றிகள். இன்றைய கால கட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் பல நிதி பற்றாக்குறை மற்றும் அவற்றை செயற்படுத்துவதில் உள்ள செலவீனங்களை ஒழுங்குபடுத்துவதிலும் அவற்றை நிர்வாக ரீதியில் சட்ட திட்டங்களுக்கு உள்ளாக அணுவதில் காணப்படும் தாமதங்கள் வாயிலாக விரைவாக ஈடேற்றுவதில் இழுபறிகள் உள்ளன.

இந் நிலையில் மக்களுக்கு வேண்டிய எமது இனத்தின் பண்பாடு கலாச்சாரம் வரலாறு போன்றவற்றினை நிலைநிறுத்தத் தக்க செயற்றிட்டங்களை கொடையாளர்களிடம் கையளித்து அவற்றை மக்கள் மயப்படுத்துவது சிறந்த உத்தியாகும். அரச நிறுவனம் மேற்கோள்ளும் அபிவிருத்தியில் பங்கேற்பு அபிவிருத்தி என்பதற்கு மேலாகச் சென்று மக்களின் பங்களிப்பாக அபிவிருந்தியை முன்கொண்டு செல்வதும் அவசியமாகவுள்ளது. அது தனவந்தர்கள் கொடையாளிகளை கிராம மட்டத்தில் இணைப்பதாக அமையும்.

இதேநேரம் இன்று பலர் அரச தாபனங்களுக்கு தமது சொத்துக்களை நன்கொடை அளிக்க முன்வருகையில், அவ்வாறான சூழ்நிலைகளில் மத்திய அரசாங்கம் சார்ந்த தாபனங்களுக்கு அன்பளிப்பது இன முரன்பாடும் பல்வேறு பட்ட ஆக்கிரமிப்பினையும் எதிர்கொள்ளும் இனம் நாம் என்ற வகையில் சரியான தீர்மானம் இல்லை. மேலும், மத்திய அரசின் தாபனங்கள் கொழும்பு மட்ட முடிவுகளுக்கு கட்டுப்பட்டு செயற்படலாம். ஆனால், உள்ளூராட்சி மன்றத்திற்கு நிலங்களை அன்பளித்தால் அதில் எமது மக்கள் பிரதிநிதிகளின் முடிவே செல்வாக்குச் செலுத்தும். மத்திய அரசு சார்ந்த தாபனங்களுக்கு காணித் தேவை காணப்படின் அவற்றை உள்ளூராட்சி மன்றங்களுக்கு கையளித்து குறித்த உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசின் தாபனங்களுக்கு வாடகைக்கு விட முடியும். இதன் வாயிலாக எமது நிலம் சார்ந்த இன ரீதியிலான பாதுகாப்பினை நாம் உறுதிப்படுத்த முடியும். இவ்வாறு முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோகூஷ் தெரிவித்தார்.





# சிங்கள தேசத்தில் கரைந்து செல்லும் கிழக்கை பாதுகாக்க கிழக்கு வடக்கு இணைக்கப்பட வேண்டும்

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்



(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களின் போரட்டம் கருணா பிள்ளையானின் உச்சகட்ட பிரதேசவாதம் ஊடாக அழிக்கப்பட்டது அவ்வர்று மீண்டும் பிரதேசவாதம் ஊடாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அழித்து ஒழிப்பதற்காக செயற்பட்டுவரும் நா. உறுப்பினர் போன்ற போலி முகங்களை மக்கள் இனங்கண்டு ஒரங்கட்டவேண்டும். அதேவேளை சிங்கள தேசத்தில் கரைந்து செல்லும் கிழக்கை பாதுகாக்க கிழக்குடன் வடக்கு இணைக்கப்படவேண்டும் அதற்கு மக்கள் விழிப்படைய வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள ஊடக கற்கை வளநிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (11-02-2024) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்தய ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட வடகிழக்கு இணைப்புக்கு எதிராக ஜே.வி.பி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து அந்த இணைந்த வடகிழக்கு இணைப்பை பிரித்தது இந்திய அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாட்டையும் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பட்டுக் கொண்டிருந்த ஜே.வி.பி கட்சி அனுரதிஸதாநாக்காவை இந்திய அழைத்துள்ளனர்.

1970ம் ஆண்டு பகுதியில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்து இந்தியா தமிழ் இளைஞர்களை அழைத்து அவர்களுக்கு ஆயுத பயிற்சியளித்து ஆயுதங்களை கொடுத்து ஆதரவு செய்துவந்தது இந்த நிலையில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்த விடயங்களில் இருந்த இயக்கங்களில் விடுதலைப் புலிகள் கடைசிவரை உறுதியாக இருந்துவந்தனர்.

இந்த நிலையில் விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு ஒத்தாசை வழங்கி தமிழ் மக்களின் ஆயுத போராட்டத்தை மௌனிக்க செய்தனர் இருந்தும் இந்த போராட்டம் மௌனிக்கப்பட்டு 14 வருடம் கடந்தும் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை எட்டாது மாறாக முன்னால் கிளர்ச்சி படையான ஜே.வி.பியை அழைத்து சந்தித்தமை தமிழ் மக்களுக்கு பெரும் கவலையளித்துள்ளது.

இந்தியா தமிழ் மக்கள் மீது ஒரு துளி கூட அக்கறையில்லாது தன்னுடைய பிராந்திய நலனுக்கு மாத்திரம் தமிழ் மக்களை பகடைக்காயாக பயன்படுத்தி கொண்டு வருகின்றமை இதில் இருந்து தெட்டதெளிவாக தெரிகின்றது.

எனவே இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றவேண்டும் வடகிழக்கு மக்கள் தான் இந்தியாவுக்கு எப்போதும் உறுதுணையாக இருப்பார்கள் இந்தியாவை தமிழ் மக்கள் நேசிக்கின்றனர். இருந்தும் ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட் பின்னர் கூட விடுதலைப் புலிகளின் தடையை நீக்காமல் தங்களுக்கு எதிரா செயற்பட்டவர்களை மாத்திரம் அழைத்திருப்பது ஒரு வேடிக்கையானது.

ஜனாதிபதி 9 வது நாடாளுமன்ற 5 ம் கூட்டத் தொடரில் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வு அவசியம் அல்ல என தெரிவித்தார் அது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் சி.சிறிதரன் தெரிவித்தகருத்துக்கள் வேடிக்கையானது என்றனர் ஆனால் உண்மையில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் நகைப்புக்குரியது.

கடந்த 2015 நல்லாட்சி காலத்தில் மைத்திபாலவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்குவக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கண்ணை மூடிக் கொண்டு எந்த விதமான நிபந்தனையும் செய்யாது தெருத் தெருவாக துண்டுபிரசுரங்களை வழங்கி ஆதரித்து ஆட்சிக்கு கொண்டுவந்தனர்.

இவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த நிலையில் எம்.சுமந்திரன் அப்போது பிரதமர் போல இருந்துர். ஆனால் தமிழ் மக்களுக்குரிய அடிப்படை பிரச்சனையை கூட தீர்க்கவில்லை அவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றுயதுடன் தொடர்ந்து பின்கதவால் வந்த ஜனாதிபதியின் வரலாறு தெரிந்தும் அவருக்கு ஒரு சர்வதேச ரீதியில் ஒரு அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

ஆனால் இன்று ஜனாதிபதியின் உரையை பார்த்து இன்று நீதி கேட்பதாக நீலிக்கண்ணீர் வடித்து மீண்டும் மக்களை ஏமாற்றும் நாடகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே ஜனாதிபதியின் கடந்த கால செயற்பாடு தொடர்பாக தமிழ் மக்கள் மிக விழிப்பாக இருக்கின்றதுடன் தமிழ் மக்களை அழித்து ஒழித்துவரும் ஒவ்வொரு சந்தர்பங்களையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளிபடுத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்த பெப்பிரவரி 4ம் திகதி வடக்கு கிழக்கில் கரிநாளாக பிரகடனப்படுத்தி வருவது வழமை அந்த நிலையில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் பொலிசாரின் அடக்குமுறைக்கு மத்தியில் மக்கள் போரட்டத்தில் வடக்கு கிழக்கு பல்கலைகளக மாணவர்கள் மற்றும் வடக்கு மதகுருமார்கள் உப்பட பலர் கலந்கொண்டனர்.

இதன் போது வடக்கை சேர்ந்த ஒரு மதகுருவை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரை வடக்கில் போய் உங்கள் வேலையை பாருங்கள் என்ற பிரதேசவாதம் பேசியிருந்தார் இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஏன் என்றால் கருணா பிள்ளையான் போன்றோர் இந்த பிரதேசவாத உச்சக்கட்டத்தினால் மிகவும் பலமாக இருந்த ஆயுதபோரட்டம் அழிக்கப்பட்டது அவ்வாறே மீண்டும் பிரதேச வாதம் ஊடாக தமிழ் மக்களை அழிப்பற்கா செயற்பட்டுவரும் இப்படிப்பட்ட போலிமுகங்கள் இனங்காணவேண்டும். இந்த நாடாளு மன்ற உறுப்பினர் தொடர்பாக கடந்த காலத்தில் வெளிபடுத்தியுள்ளோம்.


பிள்ளையானும் சில முஸ்லீம் அரசியல் கட்சி தலைவர்களும் வடகிழக்கு இணையக் கூடாது என தெரிவித்து அவர்களின் அரசியல் அரங்கை அரங்கேற்றி வருகின்றனர்.

வடக்கி கிழக்கிலே உரிமைக்காக பல் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் உயிர் தியாகம் செய்த நிலையில் இப்படிப்பட்ட குறுகிய இலாபங்களுக்காக பிரதேசவாங்களை பேசி மக்களை சிதைக்கின்ற இந்த தரப்புக்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அதேவேளை இவ்வாறான சூழ் நிலையிலே தமிழ் மக்களின் தேசமாக வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும் எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் இந்த பிரதேச வாதத்திற்கு துணைபோக மாட்டோம் என தமிழர்கள் கிழக்கு மாகாணத்திலே ஒரு உறுதியான நிலை எடுக்கவேண்டும்.

எனவே தமிழர்கள் இந்த தீவில் ஒரு நிம்மதியாக வாழவேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களின் உரிமை பிரச்சனை தீர்க்கப்படவேண்டும் தமிழ் மக்களின் தாயகம் தேசம் சுயநிர்ணயம் அங்கிகரிக்கப்பட வேண்டும் அதனூடாக தமிழ் மக்கள் நிம்மதியாக வாழமுடியும் என்றார்.

# சாந்தன் ஒரு வாரத்தில் இலங்கை செல்ல அனுமதிக்கப்படுவார்: இந்திய அரசு உறுதி



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலையான சாந்தன் தாயகம் திரும்புவதற்கானதற்காலிக பயண ஆவணத்தை இலங்கை துணை தூதரகம் அனுப்பியுள்ளதாக தமிழக அரசு தரப்பில் சென்னைஉயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன் உள்பட 7 பேரை விடுதலை செய்து, கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, விடுதலை செய்யப்பட்ட இலங்கை நாட்டை சேர்ந்தவர்களான முருகன், சாந்தன் உள்ளிட்டோர்திருச்சி அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நோய் வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக்கோரி சாந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள்சுரேகூஷ்குமார், குமரேகூஷ்பாபு அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் முனியப்பராஜ், திருச்சி சிறப்பு முகாமில் இருக்கும் சாந்தனுக்குஇலங்கை திரும்புவதற்கான தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை தூதரகம் வழங்கியுள்ளதாகவும், அந்த ஆவணங்கள் மத்திய அரசிற்கு அனுப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தரப்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல். சுந்தரேசன் ஆஜராகினார். அவர் நீதிமன்றத்தில் ”இதுவரை தங்களுக்கு அந்த ஆவணங்கள்கிடைக்கவில்லை என்பதால், தற்போது நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஆவணங்களை மத்திய அரசுக்கு அனுப்பிவைப்பதாக தெரிவித்தார். அதனடிப்படையில், சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவு ஒருவாரத்தில் பிறப்பிக்கப்படும்” எனவும் தெரிவித்தார். இதுதொடர்பாக விளக்கம் அளிக்க மத்திய அரசிற்குஉத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் விசாரணையை பிப்ரவரி 29ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

இந்தியா செய்திகள்
India News

# எங்களை பட்டினிச் சாவில் தள்ளுவதே மு.க.ஸ்டாலினின் வேலையாக உள்ளது – என்கிறார் வட மாகாண கடல் தொழிலாளர் இணைய தலைவர் எம்.வி.சுப்பிரமணியம்

இந்திய முதலமைச்சர் எங்களுடைய படகுகளை தங்களுடைய எல்லைக்குள்ளே அனுமதித்து அங்கு மீன் பிடிப்பதற்கு வழிவகுப்பாரா என்ற கேள்வி எழுகின்றது. அதனை செய்ய முன்வராமல் தங்களுடைய மீனவர்களது நலன் கருதி எங்களுடைய வளங்களை அழித்து, எங்கள் வாழ்வாதாரத்தை சூறையாடி, எங்களை பட்டினிச்சாவிலே இட்டுச் செல்வது என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் மீது கருணை இல்லாத அல்லது துரோகமான செயற்பாட்டை வெளிக்காட்டுகின்றது என வடக்கு மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் தலைவர் எம்.வி.சுப்ரமணியம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

11-02-2024 தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் தொடர்ச்சியாக இழுவைமடி தொழில் செய்வதற்கான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இங்கே பிடிபட்ட மீனவர்களை விடுவிக்கும்படி வற்புறுத்தி போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதே வேளையில் இந்தியாவின் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த நாட்டின் பிரதமர் மோடி அவர்களுக்கு ஒரு வினயமான கடிதத்தை அனுப்பி இருக்கின்றார். இந்திய மீனவர்களை இலங்கை அரசு விடுவிக்க வேண்டும், தொடர்ந்து பிடிக்க கூடாது என்ற ஒரு கருத்தை முன்வைத்து ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கின்றார்.

அத்தோடு இலங்கையிலே 2018 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு படகுகள் ஒழுங்குப் பிரமாணம் என்ற சட்டத்தை மீள் பரிசீலனை செய்து அந்த சட்டத்தை இல்லாத ஒழிக்கும் வகையிலே இலங்கையை வற்புறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்திருக்கின்றார்.



தொடர்ச்சியாக எங்களுடைய மீனவர்கள் படும் துன்பங்கள் துயரங்கள் எல்லாம் எண்ணில் அடங்காது. அந்த வகையிலே உங்களது இழுவை-மடி தொழிலாளர்களை அழைத்து எங்களது எல்லையை தாண்டி வந்து வாழ்வாதாரத்தையும் வளங்களை அழிக்காமல் இருக்கக்கூடிய வகையிலே அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள் என முதலமைச்சரவர்களை நாங்கள் பலமுறை கேட்டிருக்கின்றோம். இதன்மூலம் இழுவைமடி தொழிலை நிறுத்த முடியும் என ஆலோசனை வழங்கியிருந்தும் அவர் இந்த கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

தமிழக முதலமைச்சரவர்கள் எங்களது வளங்களையும் வாழ்வாதாரத்தையும் காப்பதற்கு தன்னாலான நல்ல முயற்சியை எடுத்து, எங்களுடைய வாழ்வாதாரத்தை எங்களுக்கே வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக ஏழரை கோடி மக்களின் ஆயிரத்தில் ஒரு பகுதியான இழுவைமடி தொழிலாளர்களின் தொழிலை நிறுத்தி மாற்று முறை தொழிலுக்கு அவர்களை மாற்றி, பாரம்பரிய முறையில் தொழில் செய்வதற்கு முன்வர வேண்டும் என கேட்டு நிற்கின்றேன் - என்றார்.

# பணி இடமாற்றத்தால் ஏற்பட்ட மனவிரக்தியால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர் உயிர்மாய்த்துக்கொண்டார்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

G. f[pe;jd;

பணி இடமாற்றத்தால் ஏற்பட்ட மனவிரக்தியால் அபிவிருத்தி உத்தியோகத்தர் உயிர்மாய்ப்பு!

பணி இடமாற்றம் காரணமாக ஏற்பட்ட மனவிரக்தியால், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தவ-றான முடிவெடுத்து இன்றையதினம் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். டச்சு வீதி மூளாய், சுழிபுரம் பகுதியை சேர்ந்த பேரம்பலம் புனிதா (வயது 49 - திருமணமாகவில்லை) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமை புரிந்து வரும் நிலையில் இவருக்கு இடமாற்றம் கிடைத்தது. ஆகையால் இடமாற்றத்தை இரத்துச் செய்வதற்கு முயற்சித்துள்ளார். ஆனால் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் இன்றையதினம் அவரது இல்லத்தில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# யாழ்ப்பாண மாவட்டத்திலும் காதலர் தினத்தை முன்னிட்டு பரிசுப் பொருட்கள் கொள்வனவில் காதலர்கள் மும்முரம்



உலக காதலர் தினத்தினை முன்னிட்டு காதலர்கள் தமது காதல் பரிசினை கையளிப்பதற்காக காதல் பொருட்களை மிகவும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் காதலர்கள் காதல் பரிசினை தத்தமது காதலர்கள், காதலிகள் தமது அன்பு காதல் பரிசினை கையளிப்பதற்கு பொருட் கொள் வனவில் கையளிப்பதற்கு மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாண மாநகர உள்ளிட்ட கடைத் தொ-குதியிலும் இவ் வாறான பொருட்கள் கொள்வனவு செய்வதில் ஆர்வம் இன்று காட்டியுள்ளனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

kd;dhu; epUgu;

# மன்னார் வைத்தியசாலையில் 38 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட மகப்பேற்று சிகிச்சை பிரிவை ஆளுநர் திறந்து வைப்பு

(09-02-2024)





மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சுமார் 38 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட மகப்பேற்று சிகிச்சை பிரிவு 09-02-2024 வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் நிதி உதவியுடன்
சுமார் 38 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட மகப்பேற்று சிகிச்சை பிரிவு இவ்வாறு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏ.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் விருந்தினராக கலந்து கொண்டு வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.





இதன் போது மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் பிரதிநிதிகள், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் இ.ஜே. புஸ்பகாந்தன் உற்பட வைத்தியசாலை பணியாளர்கள், என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதனை தொடர்ந்து மகப்பேற்று சிகிச்சை பிரிவு புனரமைப்பு பணிகளின் போது பல்வேறு வகையிலும் உதவியவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம்

## மன்னாரில் இலங்கைக்கான இந்திய இந்திய உயர்ஸ்தானிகர் எச்.இ. சந்தோஷ் ஜா தெரிவிப்பு

- எஸ்.ஆர். லெம்பேட் (15-02-2024)

இலங்கை மக்களுக்கு நாங்கள் செய்த உதவிகள் சமுதாய நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதே போன்றே மீனவ சமூகம் முக்கியத்துவம் பெறுகின்றது என இலங்கைக்கான இந்திய இந்திய உயர்ஸ்தானிகர் எச்.இ. சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் "இந்தியாவிலிருந்து அன்புடனும் அக்கறையுடனும்" எனும் தொனிப் பொருளில் மன்னார் மாவட்ட மீனவ சமாசங்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (15) மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் எச்.இ. சந்தோஷ் ஜா அவரது துணைவியார் மற்றும் இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் ராகேஷ் நடராஜ் பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.





இதன் போது தெரிவு செய்யப்பட்ட மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய 4 மீனவ சமாசங்களுக்கு குறித்த குளிர்சாதன பெட்டிகள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தின் முதல் விஜயமாக இந்த விஜயம் அமைந்துள்ளது. இங்கு என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. என்ன தேவைகள் உள்ளது என்பதை அறிந்துள்ளேன்.

2010 இல் இருந்து இங்கு அமுல் படுத்தி உள்ள பல்வேறு திட்டங்களையும் என்னால் நினைவு கூற முடிகிறது.

இலங்கை மக்களுக்கு நாங்கள் எவ்வாறு உதவி செய்துள்ளோம். அவை சமுதாய நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதே போன்றே மீனவ சமூகமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

மன்னாரிற்கு அதிகம் சுற்றுலா பயணிகள் வருகை தருவதை பார்க்க கூடியதாக உள்ளது. குறிப்பாக இந்தியாவில் இருந்து வருகை தரும் மக்களினால் இங்கு அபிவிருத்தி மாத்திரமின்றி தொடர்புகள் ஊடாகவும் இங்கு ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை பார்க்க முடிகிறது.

அரச அதிபர் கூறியது போல் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்பு களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம்.

அதற்கு தேவையான விடையங்கள் அங்கு முன்னெடுத்து வருகிறோம்.

குறிப்பாக மீனவ சமூகத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப மற்றும் இந்தியாவில் இருந்து கொண்டு வர வேண்டியவை தொடர்பாகவும் ஆராய்ந்து வருகிறோம்.



சில மாதங்களுக்கு முன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தொழில்நுட்பக் குழு ஒன்று வருகை தந்திருந்தனர்.

இங்கு இறால் மற்றும் நண்டு வளர்ப்பது தொடர்பான தொழில்நுட்ப ரீதியான உற்கட்டமைப்பு என்பவை தொடர்பாகவும் வேளைத்திட்டங்கள் இடம் பெற்று வருகிறது.

அதே போன்று பல்வேறு வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் மாணவர்கள் தங்கள் உயர் கல்வியை எவ்வாறு தொடர்வது என்பது பற்றிய பயனுள்ள கருத்தரங்கு

ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மாணவர்கள் தங்கள் உயர் கல்வியை எவ்வாறு தொடர்வது என்பது பற்றிய பயனுள்ள கருத்தரங்கு நடைபெறுகின்றது. கனடா வாழ் இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தரங்கு நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.





# யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வித்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஐயா கலாமணி காலமானார்

இலங்கை செய்திகள் Sri Lanka News

G. f[pe;jd;

வடமராட்சிபிரதேசகல்விபுலமையாளர்களில் ஒருவரான யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வித்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையா- ளர் கலாநிதி தம்பிஐயா கலாமணி தனது 72 ஆவது வயதில் சனிக்கிழமை (10) அதிகாலை காலமானார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த அன்னார் ஆரம்ப கல்வியை வதிரி தேவரையாளி இந்து கல்லூரியிலும் இடைநிலை கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைப்பட்டதாரியானார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராக இணைந்து கலைப்பீட விரிவுரையாளரானார்.

மேலும் உயர் கற்கைகளை மேற்கொண்டு கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்ட அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வியியல்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றி இருந்தார்.

கலை இலக்கிய துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காத்தவராயன் உள்ளிட்ட பல இதிகாச புராண நாடகங்களை தயாரித்தும் நடித்தும் மேடையேற்றியுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையாரான இவரின் ஒரு மகனான பரணிதரன் கடந்த சில ஆண்டுகளாக ஜீவநதி எனும் இலக்கிய மாத சஞ்சிகையினை வெளியிட்டு வருகிறார்.

கலாமணி அவர்களது தந்தையர் தம்பியஐயா புகழ் பூத்த அண்ணாவியாராவார்.

கடந்த சில வருடங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் திடீ- ரென சனிக்கிழமை (10) காலை காலமானார். அவரது இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை மாலை அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

# இந்தக் கடல் எங்களது கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதை காட்டிக் கொள்வதற்காகவே இந்தியா தம் படகுகளை இலங்கை கடற்பரப்புக்குள் அனுப்புகின்றது



### வடக்கு மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் செயலாளர் முகமட் ஆலம்

கிட்டத்தட்ட 25, 30 வருடங்களாக இந்த கடலில் நாங்கள் இருக்கின்றோம், இந்தக் கடல் எங்களது கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதை காட்டிக் கொள்வதற்காகவே அவர்கள் இந்த படகுகளை இலங்கை கடற்பரப்புக்குள் அனுப்புகின்றார்கள். அதாவது இலங்கையை அல்லது வடபகுதியை இந்தியாவின் ஒரு மாநிலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் செயலாளர் முகமட் ஆலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

11-02-2024 யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும், அதாவது **sea of Sri Lanka** என்று சொல்லப்படுகின்ற கடன் பிறப்பை ஊடறுத்து ஒரு கடல் வழிப் பாதையை உருவாக்கி அதை இந்தியாவிடம் தாரை வார்க்கக் கூடிய ஒரு செயற்பாட்டை ஊடக வாயிலாக அறிகின்றோம்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலே பாலம் அமைப்பது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி அவர்களுக்கும் இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கும் இடையிலே ஒரு பேச்சுவார்த்தை இடம்பெற்று, அந்த தீர்மானங்களும் எட்டப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

உண்மையிலேயே இந்த இலங்கை இந்திய மீனவர் பிரச்சினையை கையாளுவதினை இலங்கை ஒட்டுமொத்தமாக கைவிட்ட நிலையில் இந்தியாவின் ஆதிக்கத்தை இலங்கை கடற்பரப்பிற்குள், அதிலும் குறிப்பாக வடக்கு கடற்பரப்பிற்குள் நிலைநாட்டி வருகின்றது.

அந்த விடயத்தை வைத்து இலங்கை கடற்பரப்பு இந்தியாவுக்கு சொந்தமானது என்று வாதிட பார்க்கின்றார்கள். அதில் ஒரு அங்கமாக தமிழக படகுகள் இங்கே வருவது, அவர்களுக்கான விடுதலையை வலியுறுத்தி கௌரவ ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதுவது, அதை இலங்கை அரசு சாதகமாக பரிசீலித்து இந்திய மீனவர்களை விடுவிப்பது என்பதன் தொடர்கதையின் அடுத்த கட்டம் தான் இந்த கடல் வழிப்பாதை.

பாதையை அமைப்பது அதனை கையாள்வது யார் என்று கேள்விக்கு அப்பால், முற்றுமுழுதாக இந்திய நலன் சார்ந்ததாகத்தான் அது இருக்கப் போகின்றது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் போடப்படுகின்ற அந்த பாலம் வடமாகாணத்தை இந்தியாவின் ஒரு மாநிலமாக ஆக்கப் போகின்றது என்பது மாத்திரம் உண்மை. இது எதிர்காலத்தில் நாங்கள் அல்லது எங்களது சந்ததியினர் உணர்ந்து கொள்வார்கள் என்பதை கூறிக் கொள்கின்றேன்.

எனவே இலங்கை இன்னும் இதே நிலைப்பாட்டில் இருக்குமாக இருந்தால் இந்த நாடு துண்டு துண்டாக உடைவதையும், இந்த நாடு துண்டு துண்டாக ஒவ்வொரு நாட்டுக்கு பங்குகளாக பிரிக்கப்படுவதையும் யாராலும் தடுக்க முடியாமல் போய்விடும் எனவே இனிமேலாவது இருக்கின்ற புத்திஜீவிகள் அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

கனடிய செய்திகள் Canadian News

## Successful Forum with Dean of the Jaffna Medical Faculty, Prof. Surenthirakumaran, hosted by Canadian Tamil Chamber of Commerce

# யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரனுடன் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய வெற்றிகரமான கலந்துரையாடல்




யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரனுடன் கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய கலந்துரையாடல் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. மேற்படி கலந்துரையாடலை நேர்த்தியாக நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று கனடாவில் வாழ்ந்த வண்ணம் பல்வேறு மருத்துவம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களுக்கான பழைய மாணவர் சங்கமானது மிகுந்த ஒத்துழைப்பை வழங்கியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி M. மயிலாசனும் அவரது அமைபபும், இந்நிகழ்வு சிறப்புறவும் பயனுள்ள வகையிலும் இடம்பெற தங்கள் ஒத்துழைப்பை வழங்கினர். அமைப்பின் அங்கத்தவர்கள் பலரும் அங்கு கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டு. யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் வளர்ச்சிக்கு தங்களால் ஆன உதவி-களைச் செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.

மேற்படி கருத்தரங்கானது பல விடயங்களை எமக்கு சுட்டிக்காட்டியது. நமது தாய் மண்ணின் ஒரேயொரு மருத்துவ பீடத்தின் தலைவர் தான் அந்த பீடத்திலிருந்து பல வைத்தியப் பெருந்தகைகளை உருவாக்குவதற்கு உழைத்து வரும் அதேவேளை தனக்கு வெளிநாடுகளில் உள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி கனடாவிற்கு வருகை தந்து பல பல்கலைக் கழகங்களுக்குச் சென்று அங்கு இயங்கிவரும் மருத்துவ பீடங்களின் சிறப்புக்களை நேரடியாகப் பார்வையிட்டு தனது அந்த அனுபவங்களை தமது தாய் மண்ணின் மருத்துவ பீடத்தின்செயற்பாடுகளில் பிரயோகித்து அந்த பீடம் மேலும் உயர்ந்து நிற்க வேண்டும் என்று அக்கறை உணர்வோடு தன் பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளார். அத்துடன் யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் நவீன உபகரணங்கள் மற்றும் கற்பித்தல் முறைகள்



அதிகரிக்க வேண்டும் என்பதற்கான உதவிகளை பல்வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுச் செல்வதும் அவரது கருத்துப் பரிமாற்றத்தின் போது நன்கு புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

மேலும் தமது நுண்ணறிவை தகுந்த முறையில் பயன்படுத்தி விரிவான உரையொன்றை தகுந்த தரவுகளுடன் ஆற்றி, யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் முன்னேற்றத்தில் எமது புலம்பெயர்ந்தோர் எவ்வாறு செயற்திறனாக பங்குபற்றி பங்களிக்க முடியும் என்பதற்கான பெறுமதியான தகவல்களை பீடாதிபதி சுரேந்திரகுமாரன் வழங்கினார். என்றால் அது மிகையாகாது. மிகுந்த அடக்கமும் ஆற்றலும் கொண்டவராக விளங்கும் பேராசிரியர் சுரேந்திரகுமாரன் அவர்கள் அன்றை நிகழ்வின் “கதாநாயகனாக” விளங்கி அனைவராலும் கவரப்பட்டார் என்பது உண்மையே.



அத்துடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பங்கானது வைத்தியர்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாது யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவும் மருத்துவ சேவை தொடர்பான குறைபாடுகளையும் நீக்குவதற்கும் குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவருக்கும் தகுந்த சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும் என்றும். குறிப்பாக வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு அவர்களுக்கு இலவசமாகவோ அன்றி குறைந்த கட்டணத்திலோ வைத்திய சிகிச்சைகளை வழங்க வேண்டும் என்ற தனது ஆதங்கத்தை நன்கு வெளிப்படுத்தினார். அத்துடன் சமூகத்தின் மீதான பங்கு பற்றி உரையாற்றிய: பேராசிரியர். சமூக மேம்பாட்டில் பல்கலைக்கழகங்கள் வகிக்கும் முக்கிய பங்கு மற்றும் செயலூக்கமான ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை சபை-யோர் உணர்ந்து கொள்ளும் வகையில் வலியுறுத்தினார்.முவடமாகாணத்தில் பிறப்பு வீதம் குறைதல் மற்றும் இறப்பு அதிகரிப்பு: வடமாகாணத்தில் குறையும் பிறப்பு வீதம் மற்றும் இறப்பு அதிகரிப்பு தொடர்பான சவால்கள் குறித்து பீடாதிபதி கலந்துரையாடியதுடன், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சாத்தியமான உத்திகளையும் ஆராய்ந்தார்.

முக்கியமாக உலகளாவிய ஆரோக்கியத்திற்கான பங்களிப்பு: யாழ் மருத்துவ பீடத்துடன் கூட்டு முயற்சிகள் மூலம் உலகளாவிய சுகாதார முன்முயற்சிகளுக்கு புலம்பெயர்ந்தோர் பங்களிப்பதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்கும் வகையில் காத்திரமான தரவுகளுடன் தனது உரையைத் தொடர்ந்தார் மருத்துவ பீடாதிபதி அவர்கள்.

உலக சுகாதார அமைப்பினால் (WHO) ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண ஆரோக்கியமான நகரத் திட்டம் மற்றும் இந்த முயற்சிக்கு எமது புலம் பெயர்ந்த தமிழர்கள் எவ்வாறு தங்கள் ஆதரவை வழங்கலாம் என்பது தொடர்பான விளங்கங்களை மருத்துவ பீடாதிபதி சுரேந்திரகுமாரன் வழங்கினார்.

மேலும் இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து யாழ்ப்பாண



மருத்துவ பீடத்திற்கு கிடைத்துள்ள உதவிகள் மற்றும் தற்போதைய ஒத்துழைப்பு: மற்றும் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களுடனான தற்போதைய கூட்டுப்பணிகள் மற்றும் இணைந்து பணியாற்றும் வழிகள் பற்றிய தகவல்களும் பேராசிரியர் அவர்களினால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மருத்துவத்துறையின் மரபியல் பிரிவு மற்றும் மேமோகிராம் அலகு போன்ற குறிப்பிட்ட பிரிவுகளின் அவசரத் தேவையை டீன் எடுத்துரைத்து, நமது உடனடி பங்களிப்புக்களுக்கான வாய்ப்புகளை பேராசிரியர் முன்வைத்தார்.

இலாப நோக்கற்ற வர்த்தக முயற்சிகளுக்கும் பொது-தனியார் இணைந்து பணியாற்றும் முறை பற்றியும் பேராசிரியர் சுரேந்திரகுமாரன் பார்வையாளர்கள் பலர் ஏற்றுக் கொள்ளும் வகையில் உற்சாகப்படுத்தினார்.



மேலும், தொழில்நுட்பத்துறையில் கூட்டாகப் பயணிப்பது மற்றும் அறிவுப் பகிர்வு: பல்கலைக்கழகத்தின் திறன்களை மேம்படுத்துவதற்கான வழிகளாக எதிர்காலத்தில் உதவலாம் என்பதையும் பேராசிரியர் எடுத்துரைத்தார்.

பேராசிரியரின் உரை மற்றும் கலந்துரையாடல் ஆகியவை நிறைவுற்ற பின்னர் அவருக்கு கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் சார்பில் நினைவுப் பரிசும் வழங்கப்பெற்றது.

---

## மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் வருடாந்த இராப்போசன ஒன்றுகூடல் அறிவிப்பு

### (Mora Night 2024 Announcement)

*மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கனடா வாழ் பழைய தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் இனிய வணக்கங்கள்!*

*மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கனடா பழைய தமிழ் மாணவ ஒன்றியம் தனது இருபத்தி மூன்றாவது வருடாந்த இராப்போசன ஒன்றுகூடலை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இருபத்தி நான்காம் திகதி (**24th of February 2024**) நடாத்த உள்ளது.*

*இடம்:* ***Kennedy Convention Centre***
***1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2***
*நேரம்:* ***5 pm EST***

*இராப்போசன நிகழ்வோடு உங்களை மகிழ்விக்க பழைய மாணவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் பங்குபற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளும் தயாராக இருக்கும். இந்த நிகழ்விற்கு மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கனடா வாழ் பழைய தமிழ் மாணவர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் அன்போடு வரவேற்கின்றோம்.*

*இந்த நிகழ்வானது பல்கலைக்கழக நண்பர்களோடு ஒன்றுகூடவும், பல்கலைக்கழக இனிய நாட்களை மீட்டுப்பார்க்கவும், புதிய நண்பர்களை உருவாக்கவும் சிறந்த இடமாக அமையும். மேலும் நாம் கடந்து வந்த பல்கலைக்கழக நாட்களையும் நமது வாழ்க்கைப்பாதையில் நடந்த நிகழ்வுகளையும் நாம் படைத்த சாதனைகளையும் நமது பல்கலைக்கழக நண்பர்களோடு பகிர்ந்து மகிழ ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.*

*நன்றி.*
*இளவஞ்சி கனகநாயகம்*
*செயலாளர் UMTAAC*

*UMTAAC Committee 2023/24*

## TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| vy;yhtpkhd typfSf;Fk; | All Pain & Aches, Arthritis |
| M];kh> gPdprk;> xt;thik | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| kdj;jsh;r;rp> jiytyp | Stress, Migraine & All Types of Headaches |
| ePhpopT Neha;> tapw;Wtyp | Diabetes, Gastric Pain, Ulcer |
| khjtplja; rk;ke;jkhditAk; | Menstruation |
| clw;gUkd; Fiwj;jy; | Weight Loss |

Kjyhd rfytpjkhd Neha;fSf;Fk;

**Mrs. K. Vasanthakumar**
Acupuncturist (R.A.C)
njhlh;Gnfhs;sTk;.

**(416) 754-4024**

**5200 Finch Ave., East -- Suit #349**
**Scarborough, ON M1S 4Z5**

# உடுவில் மகளிர் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவு

இலங்கை செய்திகள் Sri Lanka News



கடந்த ஆறாம் திகதி காலை, உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்கள் தொடங்கின. கல்லூரி மண்டபத்தில் தொடக்க நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வின் தலைப்பு "அந்திசோ" என்ற கிரேக்க வாசகம் ஆகும். அதன் பொருள் "மலர்தல்" என்பதாகும்.

200 ஆண்டுகளுக்கு முன் வயதில் இளைய அமெரிக்க இறை ஊழியரான ஹரியட் வின்ஸ்லோ உடுவில் மகளிர் கல்லூரியைத் தொடங்கினார். அது அப்பொழுது பெண்கள் மத்திய கல்லூரி என்று அழைக்கப்பட்டது. முதல் இரண்டு மாணவிகளும் யார் என்றால், மிக்ஷன் வீட்டின் சாளரங்கள் வழியே விடுப்புப் பார்த்த இரண்டு சிறிய பெண்கள்தான். ஹரியட், அவர்களுக்குப் படிப்பிக்கத் தொடங்கினார். அதிலிருந்தே ஒரு மகத்தான நிறுவனம் பிறந்தது. ஆசியாவின் மிகப் பழைய, விடுதி வசதிகளோடு கூடிய, பள்ளிக்கூடம் அதுதான். பெண்களைக் கற்பிப்பது தொடர்பாக சமூகத்தில் இருந்த எதிர்ப்புகளின் மத்தியிலும் அங்கு கற்கும் பெண்களின் தொகை மெதுமெதுவாக உறுதியாக அதிகரித்தது. ஹரியட் தனிப்பட்ட பல இழப்புக்களால் துன்பப்பட்டார். முடிவில் தனது 33ஆவது வயதில்-இளவயதில்,இறந்து போனார்.

உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆண்டு கால வரலாற்றில் 10 அதிபர்கள் பணி புரிந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் கல்லூரியின் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதில் தங்களுடைய அழியாத அடையாளங்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். இப்பொழுது ரோஷனா குலேந்திரன் அதிபராக இருக்கிறார்.

பெண்களைப் படிப்பிப்பது அவர்களைத் திருமணத்துக்குத் தயாராக்குவதற்கு என்று, முன்பொருகாலம் நகைச்சுவையாகக் கூறப்படுவதுண்டு. அக்கூற்றில் ஓரளவுக்குப் பொறாமையும் உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் உடுவில் மகளிர் கல்லூரி அதைவிட அதிக தூரம் பயணித்தது. கல்வி மற்றும் இணைப் பாடவிதான நடவடிக்கைகள்மூலம் சமூகத் தடைகளை உடைத்து, இளம் பெண்களைச் சக்தி மிக்கவர்கள் ஆக்கிய முதலாவது கல்லூரி அது. இலங்கைத் தீவின் செழிப்பான கல்வி வரலாற்றில் அது ஒரு பெரிய பங்களிப்பு.

கடந்த ஆறாம் திகதி நடந்த விழாவில், பிரதம விருந்தினராகிய திருமதி கூஷிராணி மில்ஸ் அதை முக்கியத்துவப்படுத்திக் கூறினார். அவர் கல்லூரியின் பழைய மாணவியும் ஆவார். மற்றவர்களுக்கு இரங்குவது மற்றவர்களின் மீது அனுதாபப்படுவது, மற்றவர்களின் திறமைகளைக் கட்டியெழுப்புவது என்பது ஒரு அங்கீகரிக்கப்பட்ட போக்காக மாறுவதற்கும் வெகு காலத்துக்கு முன்னரே, உடுவில் மகளிர் கல்லூரி, அவற்றுக்குரிய முக்கியத்துவத்தைக் கொடுத்தது என்பதனை அவர் தனது உரையில் அழுத்திக் கூறினார்.







அக்கல்லூரி எப்பொழுதும் பேணிய உயர் தராதரத்துக்கு அன்றைய நிகழ்வு ஒரு சான்றாக அமைந்தது. அந்நிகழ்வில் பங்குபற்றியவர்கள் தன்னம்பிக்கையோடும் விடயங்களை சிறப்பாக எடுத்துக் கூறும் ஆற்றலோடும் காணப்பட்டார்கள். ஆரம்பப் பள்ளிச் சிறார்கள் ஆர்வத்தோடு, வசீகரமாக மேற்கத்திய நடனத்தை ஆடினார்கள். வளர்ந்த பிள்ளைகள் உயிர்த்துடிப்போடு பாரம்பரிய நடனத்தை ஆடினார்கள். 200ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இசைக்கப்பட்டன. கீழைத்தேய மற்றும் மேலைத்தேய இசைகளில் பாடப்பட்ட அப்பாடல்கள் உடுவில் மகளிர் கல்லூரியிடமிருந்து எப்பொழுதும் எதிர்பார்க்கப்படும் தராதரத்தை வெளிப்படுத்தின. இரண்டு நினைவுச் சின்னங்கள் மாணவர்களால் வடிவமைக்கப்பட்டிருந்தன. அவையனைத்தும் அதிபர் மற்றும் ஆசிரியர் குழாத்தினால் பண்படுத்தப்பட்ட பிள்ளைகளின் திறமைக்குச் சான்றாக அமைந்தன.

உலகில் இப்பொழுது நேர்மையும் விசுவாசமும் எல்லா நிலைகளிலும் அருகிக் கொண்டுவரும் இத்தருணத்தில், "உண்மை உன்னை விடுதலை செய்யும்" என்ற பாடசாலையின் இலட்சிய வாசகமானது மகத்தான முக்கியத்துவத்தோடு அங்கே எதிரொலித்தது.

தனிப்பட்ட முறையில் நான் ஒன்றைச் செல்ல வேண்டும். அங்கே நான் பிரசன்னமாகியிருந்தது தனிப்பட்ட முறையில் எனக்குப் பேருவையாக இருந்தது. அந்தப் பள்ளிக்கூடம் தொடர்பான எனது ஞாபகங்கள் மிகவும் மங்கலானவை. எனது தாயார் இணுவில், மக் லியோட் ஆஸ்பத்திரியில் மருத்துவப் பொறுப்பதிகாரியாக பணிபுரிந்த காலகட்டத்தில் அப்பள்ளிக்கூடத்தின் ஆரம்பப் பிரிவில் நான் இரண்டு ஆண்டுகள் மட்டுமே கல்வி கற்றேன்.

தன்னிகரற்ற அந்த நிறுவனத்தின் மிகச் செழிப்பான 200 ஆண்டுகால வரலாற்றை நினைவு கூரும் அற்புதமான கொண்டாட்டங்களை, அதிபரும் ஆசிரியர் குளாமும் மாணவர்களும் இணைந்து சிறப்பாக முன்னெடுப்பார்கள் என்று நான் மிக உறுதியாக நம்புகிறேன்.

மருத்துவ நிபுணர்
தயாளன் அம்பலவாணர்

**MORTGAGE**

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# முத்தவெளியில் நடந்த இசை நிகழ்ச்சியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

பாடசாலைகள் பல்கலைக்கழகங்களைக் கட்டுவது உன்னதமானது. புலம்பெயர்ந்துபோன எல்லாத் தமிழர்களும் தாயகத்துக்கு திரும்பி வருவதில்லை. தாயகத்துக்கு திரும்பிவரும் எல்லாருமே தாயகத்தில் முதலீடு செய்வதில்லை. தாயகத்தில் முதலீடு செய்பவர்களிலும் மிகச்சிலர்தான் கல்வித்துறையில் முதலீடு செய்கிறார்கள். ஆளில்லா ஊரில் ஆலயங்களைக் கட்டுவதை விடவும் கல்விச்சாலைகளை கட்டுவது மகத்தானது. அப்படி ஒரு முதலீடுதான் கந்தர்மடம் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நோர்தேன் யுனி என்று அழைக்கப்படும் தனியார் பல்கலைக்கழகம்.

போட்டிக் கல்வி வியாபாரமாகிய ஒரு கல்விச் சூழலில், ஒரு முதலாளி கல்வியில் முதலீட்டைச் செய்யும்பொழுது அங்கேயும் வியாபார இலக்குகள் இருக்கும். ஆனால் தனது முதலீட்டை விளம்பரப்படுத்துவதற்காக சினிமாத் துறைப் பிரபல்யங்களை கொண்டு வரும்போதுதான் சர்ச்சை எழுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ மி'னரிகளும் இந்து மத மறுமலர்ச்சியாளர்களும் போட்டிக்குப் பள்ளிகூடம் கட்டிய ஒரு பிரதேசம்தான் யாழ்ப்பாணம். நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது அவ்வாறு போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு போக்கின் தேறிய விளைவுதான்.

அமெரிக்காவில் தமது சுகபோக வாழ்க்கைகளைத் துறந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து சன்னியாசிகள் போல வாழ்ந்து பள்ளிக்கூடங்களைக் கட்டிய மிஷினரிமார்கள்; பிடியரிசி சேர்த்துக் கட்டப்பட்ட இந்துக் கல்லூரிகள் என்ற மகத்தான முன்னுதாரணங்கள் ஈழத் தமிழர்களுக்கு உண்டு.

இம்மாதம் ஆறாம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியில், அக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 200ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்கள் தொடக்கின.

சரியாக 200 ஆண்டுகளுக்கு முன் திருமதி. ஹரியற் வின்சிலோ என்று அழைக்கப்படும் அமெரிக்கப் பெண்மணி உடுவில் மகளிர் கல்லூரியைக் கட்டியெழுப்பினார். தென்னாசியாவில் விடுதி வசதியோடு கூடிய முதலாவது பெண்கள் பள்ளி அது. யாழ்ப்பாணத்தில் ஹரியற் அம்மையார் தங்கியிருந்த காலத்தில் அவருடைய ஐந்து பிள்ளைகள் தொற்று நோய்க்கு இரையானார்கள். அமெரிக்காவுக்கு படிப்புக்காக அனுப்பப்பட்ட அவருடைய ஆண்பிள்ளை கடல் பயணத்தில் இறந்து போனார். தொடர்ச்சியான தனிப்பட்ட இழப்புகளால் நொறுங்கிப்போன போன ஹரியற் தன்னுடைய 37 ஆவது வயதில், இளவயதில் இறந்து போனார். அவரோடு சேர்ந்து பணிபுரிய வந்த அவருடைய இரண்டு சகோதரிகள் அவருக்குப் பின் இறந்து போனார்கள். தன் மூன்று சகோதரிகளோடு சேர்ந்து பணிபுரிவதற்கென்று அமெரிக்காவிலிருந்து வந்த மற்றொரு சகோதரி யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கிய பின்னர்தான் தன்னுடைய ஏனைய மூன்று சகோதரிகளும் உயிரோடு இல்லை என்பதை அறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தின் கல்வியை கட்டியெழுப்புவதற்காக எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்து தொண்டு புரிந்திருக்கிறார்கள். அவர்கள் மதம் மாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவர்களுடைய செயற்பாட்டுகளுக்கு எதிராக இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் பள்ளிக்கூடங்களைக் கட்டி எழுப்பினர்.

மிஷன் பள்ளிக்கூடங்களை எதிர்கொண்டு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் சுதேசிகளின் பள்ளிக்கூடங்களைக் கட்டினார். அவ்வாறு பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு அவர் பிடியரிசித் திட்டம் என்ற ஒரு சமூகப் பங்களிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிராமங்கள் தோறும் பிடியரசி சேகரிக்கப்பட்டு, அந்த நிதியில் யாழ். இந்துக் கல்லூரியும் உட்பட பல்வேறு சுதேச பள்ளிக்கூடங்களை இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் கட்டினர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் மருதனார் மடத்தில் ராமநாதனின் கல்லூரி கட்டப்பட்டது. அப்பள்ளிக்கூடத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகிய திருமதி லீலா ராமநாதன் ஒரு ஒஸ்ரேலியப் பெண். அவருடைய சேவையை வியந்து போற்றுபவர்கள் அவருடைய வெண்ணிறப் பாதங்களில் அந்த ஊரின் செம்பாட்டுச் சாயம் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிருக்கும் என்று கூறுவார்கள்.

இவ்வாறு எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்கார பெண்களும் ஆண்களும், உள்ளூரில் சைவசமய மறுமலர்ச்சியாளர்களும் கல்விச்சாலைகளைக் கட்டியெழுப்பிய போது அவர்கள் அதை அதிகபட்சம் தொண்டாகவே செய்தார்கள். கல்விப் பணி என்பது உன்னதமான ஒரு தொண்டாகக் கருதப்பட்டு, போற்றப்பட்ட காலகட்டம் அது.

இப்படிப்பட்ட கல்விச்சாலைகளைக் கட்டும் ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்தே நோர்தென் யூனிவர்சிட்டியைப் பார்க்க வேண்டும். அந்த பல்கலைக்கழகம் கட்டப்பட்டிருக்கும் கந்தர் மடம் சந்தியில் இருந்து அரசடிச் சந்தியை நோக்கி வரும் கந்தர் மடம் வீதியில், முன்பு ஒரு சைவப் பிரகாசா வித்தியாசாலை இருந்தது. அங்கே மாணவர்களின் வரவு குறைந்தபடியால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு; பின்னர் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் இப்பொழுது ஏதோ ஒரு அரச கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அச்சிறிய பள்ளிக்கூடத்துக்கு ஈழப்போரில் ஒரு முக்கியத்துவம் உண்டு. 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடந்த பொழுது சைவப்பிரகாச வித்தியாசாலை ஒரு வாக்களிப்புச் சாவடியாக இருந்தது. மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக்கொள்ளாத விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த சாவடியில் காவலுக்கு நின்ற போலீசாரின் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். இப்பொழுது மாணவர்கள் இல்லை என்பதால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது. அது அமைந்திருக்கும் வீதி பலாலி வீதியில் வந்து ஏறும் சந்தியில் நோர்தேன் யூனி கட்டப்பட்டிருக்கிறது.

கனடாவில் வசிக்கும் தமிழ் முதலீட்டாளர் அதைக் கட்டியிருக்கிறார். தனது தாயகத்தில் அவர் முதலீடு செய்ய விரும்புகிறார். குறிப்பாக அதனைக் கல்வித் துறையில் முதலீடு செய்ய விரும்புகிறார். தமிழ் மக்களுக்கு தனியார் பல்கலைக்கழகங்கள் வேண்டும். தமிழ்மக்கள் தங்களுக்கு வேண்டிய துறைகளை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தில் தங்குகியிராத அது போன்ற பல்கலைக்கழகங்கள் வேண்டும். அந்த அடிப்படையில் அந்த முதலீட்டை வரவேற்க வேண்டும்.

அந்த முதலீட்டாளரின் மனைவி இந்தியாவின் சினிமாப் பிரபல்யங்களில் ஒருவர். அதனால் அப்பல்கலைக்கழகத்தை விளம்பரப்படுத்த முயன்ற முதலீட்டாளர் தன்னுடைய மனைவியின் துறை சார்ந்து சிந்தித்து விட்டார். தன் மனைவியின் துறை சார்ந்த பிரபல்யங்களை கொண்டு வந்து பெருமெடுப்பில் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவதன்மூலம் தனது பல்கலைக்கழகத்திற்குப் பொருத்தமான விளம்பரம் கிடைக்கும் என்று அவர் கருதியிருக்கலாம்.

தமிழ் வெகுசனைப் பண்பாட்டில் சினிமாவின் தாக்கம் வலியது. பெருந்தமிழ் பரப்பில், குறிப்பாக தமிழகத்தில், அரசியல் எனப்படுவது ஏதோ ஒரு விகிதமளவுக்கு சினிமாவின் நீட்சியும் அகட்சியும்தான். ஊடகமாகட்டும் பொழுதுபோக்கு ஆகட்டும், எல்லாவற்றிலும் சினிமாவின் தாக்கம் உண்டு. கேபிள் தொலைக்காட்சி எனப்படுவது சுந்தர ராமசாமி கூறுவதுபோல வீட்டுக்கு வந்த திரைப்படம்தான். அது வீட்டில் வரவேற்பறையில் எப்பொழுதும் இருப்பது. எனவே தமிழ்ப் பொது உளவியலைச் செதுக்குவதில் தமிழ்ச் சினிமா கணிசமான செல்வாக்கைச் செலுத்துகிறது.

தென்னிந்திய வணிக சினிமாவானது மேலோட்டமானது; தமிழ் பொதுப் புத்தியைச் சுரண்டுவது அல்லது அவமதிப்பதுதான். தமிழில் ஜனரஞ்சகமானவை பெரும்பாலானவை மேலோட்டமானவைதான்; ஆழமற்றவைதான்; அறிவுக்கு விரோதமானவைதான்.

இந்த அடிப்படையில் பார்த்தால் அறிவைக் கட்டியெழுப்பும் ஓர் உயர்கல்வி நிறுவனத்துக்கு ஜனரஞ்சகமான விளம்பரஉத்தி ஒன்றைத் தேர்ந்தெடுத்த விடயத்தில் அந்த முதலீட்டாளர் தவறிழைத்து விட்டார்.

நிகழ்வில் கூடிய கூட்டத்தைக் கட்டுப்படுத்த அவர் மேடையில் பேசுகிறார். தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்காகத் தான் புலம்பெயர்ந்து போன நாட்டில் இருந்து வந்திருப்பதாக கூறுகிறார். ஆனால் கூட்டம் அவருக்கு அடங்கவில்லை. அவருடைய மனைவி ரம்பா பேசுகிறார். கூட்டம் அடங்கவில்லை. போலீஸ் அதிகாரி பேசுகிறார் கூட்டம் அடங்கவில்லை. அப்படி ஒரு கூட்டத்தை எதிர்பார்த்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததன் விளைவு அது. புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி அதிகாரத்துக்குள்ள வரையறைகளை உணர்த்திய ஒரு நிகழ்வும் அது.

ஆனால் அந்தக் குழப்பம் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளுக்கு விரோதமானது அல்ல. முதலீட்டை விளம்பரப்படுத்த எடுத்துக்கொண்ட வியாபார உத்தியின் விளைவு அது. மேலும், ஹரிஹரனின் இசையை பார்வையாளர்கள் அவமதித்ததாகவும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு தமிழ் முதலீட்டாளர் தமிழ் பொதுப்புத்தியை கையாள்வதில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் உண்டு என்பதனை உணர்த்திய ஒரு குழப்பம் அது. தாயகத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகள் தொடர்பாக முதலீட்டாளர்களும் தாயகத்தில் உள்ள அரசியல் சமூகமும் இணைந்து ஒன்றிணைந்த ஒரு வேலைத் திட்டத்துக்குப் போகவேண்டியிருப்பதை உணர்த்திய ஒரு நிகழ்வு அது.

தாயகத்துக்கு முதலீடுகள் அவசியம். தாயகத்தில் தொழில் வாய்ப்புகள் இல்லை; அல்லது மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கை இல்லை; அல்லது முன்னேறுவது கடினம் என்று கருதும் ஒரு தொகுதி மக்கள் தாயகத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிய ஒரு மக்கள் கூட்டம், அந்த மண்ணை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது. எனவே தாயகத்தைத் தொழிற் கவர்ச்சி மிக்கதாக மாற்ற வேண்டும். அதற்கு முதலீடுகள் அவசியம். ஆனால் அந்த முதலீடுகளை எந்த நோக்கு நிலையில் இருந்து முன்னெடுப்பது என்பதுதான் இங்குள்ள சவால்.

நாங்கள் தானம் செய்கின்றோம் அல்லது தொண்டு செய்கிறோம் என்ற நிதி அதிகார மனோநிலையில் இருந்து அல்ல, மாறாக, தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவது; அதற்கு வேண்டிய துறைசார் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவது என்ற நோக்குநிலையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடுகளைச் செய்ய வேண்டும் அதாவது தேச நிர்மானத்தின் பங்காளிகள் என்ற அடிப்படையில் முதலீட்டாளர்கள் தாயகத்தை நோக்கி வரவேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளை எப்படி தேச நிர்மானத்தின் பங்காளிகள் ஆக மாற்றுவது என்று தாயகத்தில் உள்ள அரசியல் சமூகம் சிந்திக்க வேண்டும்.

முதலாளிகள், அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் சரி, சிங்களவர்களாக இருந்தாலும் சரி, வெள்ளைக்காரர்களாக இருந்தாலும் சரி, முதலாளிகள்தான். அவர்களிடம் லாப நோக்கம் இருக்கும். அவர்கள் முதலீடுகளை லாப நோக்கத்தோடுதான் முன்னெடுப்பார்கள். முதலாளிகள் அப்படித்தான் சிந்திப்பார்கள். ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை கொழும்புமைய நோக்கு நிலையில் இருந்துதான் அணுகுவார். அவர் அப்படித்தான் சிந்திப்பார். ஆனால், முதலீடுகளை கொழும்பின் நோக்கு நிலையில் இருந்தோ அல்லது தனிய லாப நோக்கு நிலையில் இருந்தோ செய்வதற்கு பதிலாக தேசத்தைக் கட்டியெழுப்புவதன் ஒரு பகுதியாக அதைச் செய்யுமாறு, தமிழ் அரசியல் சமூகம் முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களை தேச நிர்மாணம் என்ற நோக்கு நிலையில் இருந்து வழிநடத்த வேண்டிய பொறுப்பு தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் சமூகத்திற்கு உண்டு.

---



# மட்டக்களப்பு குடும்பிமலையில் சட்டவிரோ மின்சார வேலியில் சிக்கி இரு விவசாயிகள் உயிரிழப்பு




முன்னாள் பிரதி அமைச்சருக்கு சொந்தமான பண்ணையை சுற்றி அமைத்துள்ள மின்சார வேலி தாக்கி மாமன் மருமகனாகிய இரு விவசாயிகள் உயிரிழந்த நிலையில் மீட்பு





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு குடும்பிமலை பிரதேசத்தில் பண்ணை ஒன்றில் சட்டவிரேதமாக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் மின்சாரம் தாக்கி மாமன் மருமகனாகிய இரு விவசாயிகள் உயிரிழந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (13) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

குடும்பிமலையைச் சேர்ந்த 51 வயதுடைய ஆறுமுகம் லோகநாதன், பலிபாய்ந்த கல்லைச் சேர்ந்த 21 வயதுடைய விநாயகமூர்த்தி சுதர்சன் ஆகிய இருவரும் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள குடும்பிமலை ஈச்சையடி பகுதியில் முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான பண்ணையை வாழைச்சேனையைச் சேர்ந்த நபர் ஒருவர் குத்தகைக்கு எடுத்து செய்துவரும் நிலையில் காட்டு விலங்குகள் உள்நுழைவதை தடுப்பதற்காக சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்று பண்ணையை சுற்றி மின்சார வேலி அமைத்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த பண்னைபகுதியை அருகில் வேளாண்மை அறுவடைக்கு சென்று மாமனாரும் மருமகனும் சென்றுள்ள நிலையில் சம்பவதினமான பணனைக்கு சென்ற உரிமையாளர் மின்சார வேலியில் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளதை கண்டு பொலிசாருக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிசார் நீதிமன்ற உத்தரவை பெற்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

# சாந்தன் என்கிற தில்லையம்பலம் சுதேந்திரராஜாவை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான அனுமதியை இந்திய இலங்கை அரசுகள் வழங்கியுள்ளனவா?



தனது முதுமைக் காலத்தில் மகனுடன் இணைந்து வாழ வேண்டும் என்கிற தில்லையம்பலம் மகேஸ்வரியின் கனவும் நனவாகும் சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. அவருடைய மகன் சாந்தன் என்கிற தில்லையம்பலம் சுதேந்திரராஜாவை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான அனுமதியை இந்திய மற்றும் இலங்கை அரசுகள் வழங்கியுள்ளன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றாவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு, 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்த அவர் உள்ளிட்ட ஏழு பேரையும் இந்திய உச்சநீதிமன்றம் விடுவித்தது. இதே வழக்கில் தண்டிக்கப்பட்டிருந்த பேரறிவாளனை விடுதலை செய்த அதே தீர்ப்பை மேற்கோள்காட்டி சாந்தன் உட்பட அனைவரையும் நீதியரசர்கள் பி ஆர் கவாய் மற்றும் பி வி நாகரட்ணா ஆகியோர் அமர்வு விடுவித்து கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி தீர்ப்பளித்தனர்.

சாந்தன் இலங்கை திரும்பிச் செல்வதற்கான தற்காலிக பயண ஆவணத்தை சென்னையிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயம் இந்த மாதத்தின் முற்பகுதியில் வழங்கியுள்ளது.

அவரது பயணத்திற்கான அந்த மூல ஆவணத்தை தமிழக அரசின் பொதுத்துறை செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவரை நாட்டிற்கு திருப்பியனுப்பும் நடவடிக்கையை விரைவாக முன்னெடுக்குமாறு துணைத் தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

“இந்த பயண ஆவணம் கிடைக்கப்பெற்றது என்பதை நீங்கள் தெரிவித்தால் நன்று, மேலும் அவரை விரைவாக நாடு கடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து, அது குறித்த விபரங்களை எமக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்” என சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தின் உயரதிகாரி தமிழக அரசுக்கு எழுதியுள்ளார்.

தற்போது திருச்சி சிறப்பு (தடுப்பு) முகாமிலிருக்கும் சாந்தனை இலங்கை திருப்பி அனுப்புவதற்கான பயண ஆவணமானது இந்திய மத்திய அரசின் வெளிவிவகார அமைச்சின் வேண்டுகோளின் அடிப்படையில் வழங்கப்பட்டதாக தூதரக அதிகாரிகள் கூறுகின்றனர்.

முன்னதாக வயதான தனது தாயாருடன் வசிக்க வழியேற்படுத்தும் வகையில் தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டுமென சாந்தன் இந்திய மத்திய அரசுக்கு மாநில அரசுக்கும் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரியும் இந்தியப் பிரதமர் நரேந்தி மோடிக்கு கண்ணீர் மல்க நேரடியாக ஒரு வேண்டுகோளை காணொளி மூலம் விடுத்திருந்தார்.

சாந்தனின் மனு உரிய பரிந்துரையுடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி மத்திய அரசுக்கு மாநில அரசால் கோரிக்கை விடுக்கப்பட்டது. திருச்சி சிறப்பு முகாமிலிருந்த சாந்தனின் உடல் நிலை மோசமடைந்தது அடுத்து அவர் சென்னையிலுள்ள ராஜீவ் காந்தி அரச பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். அவருக்கு கல்லீரல் பாதிக்கப்பட்டுள்ள பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

இதையடுத்து அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாக வைத்தியசாலைத் தகவல்கள் கூறுகின்றன. அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு மூச்சிழுப்பு இருந்தது, வயிற்றில் திரவம் நிரம்பி, கால்கள் வீக்கம்டைந்திருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர்.

அவருக்கு உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை தேவைப்படும் எனவும், அவரது உடல்நிலை ஸ்திரமடைந்த பின்னர் அதை செய்யலாம் எனவும் வைத்தியர்கள் கூறுகின்றனர். அதேவேளை அவரது சட்டத்தரணி பாண்டியன் புகழேந்தி, அவரது உடல்நிலை சிறிது முன்னேறியுள்ளதாகவும் பயணிக்க முடியுமெனவும் தெரிவிக்கின்றார்.





Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Per-mits
Contact: Siva
416-706-8160




முன்னரை விட அதிகமான நபர்கள் வேலை செய்கிறார்கள்.
2018 ஆம் ஆண்டை விட இப்போது 700,000 ற்கும் அதிகமான வேலை செய்கிறார்கள்.
அது இங்கே நிகழ்கிறது.
ஒன்ராறியோ அரசாங்கத்தினால் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்.
Ontario

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION



"Let's step forward together"

Contact Us Today

NESAN 416-908-5656

Subramaniam

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity Line of Credit
• Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

Powered By

Mortgage Alliance · RightBroker = RightMortgage · Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · National Bank · First National Financial LP

MCAP · Home Trust · Equitable Bank · RFA · radius financial · RMG mortgages


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# சூழ்ச்சிகளை முறியடித்து மாநாட்டை நடத்துங்கள்! சிவஞானம் சிறீதரனுக்கு சம்பந்தன் அறிவுறுத்தல்



Cட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து, உடனடியாக மாநாட்டை நடத்துமாறு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும் இணைந்து, 13-02-2024 அன்று, கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் இரா. சம்பந்தனை சந்தித்துக் கலந்துரையாடியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், நிருவாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச்சபை அங்கீகரிக்காதவிடத்து, அல்லது அத்தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடாத்தி, அன்றையதினமே மாநாட்டையும் நடாத்துமாறு அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தமிழரசு கட்சியின் மாநாடு மற்றும் தலைவர்தேர்வு கட்சியின் 19 ஆம் திகதிய மாநாடு ஆகியவற்றிற்கு இரண்டு வாரங்களுக்கு இடைக்கால தடை

## திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் கட்டளை

**- நடராசா லோகதயாளன்**




,லங்கை தமிழரசு கட்சியின் 19ஆம் திகதிய மாநாடு மற்றும் தலைவர்தேர்வு உள்ளிட்டவற்றிற்கு இரண்டு வாரங்களுக்கு இம்மாநாட்டை நடாத்த வேண்டாம் என திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் 15-02-2024 அன்று இடைக்கால தடை விதித்து கட்டானையொன்றினை பிறப்பித்துள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 14 நாட்களுக்கு செயற்படும் வகையில் மேற் குறித்த இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவக்குமாருடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தன் ஆகியோர் ஆஜராகினர்.

கடந்த 21 மற்றும் 27ம் திகதிகளில் நடைபெற்ற பொதுச் சபை கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானதும், செல்லுபடியற்றது என வாதம் முன்வைக்கப்பட்டது.

எனவே குறித்த இரண்டு பொதுச் சபை கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானதும் செல்லுபடியற்றது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

தமிழரசு கட்சியின் அமைப்பு விதி அனுமதிக்கின்ற தொகையை விட அதிகளவான உறுப்பினர்கள் பொதுச் சபை கூட்டங்களில் பங்குபற்றி குறித்த தெளிவுகளின் போது வாக்களித்துள்ளமையினால் குறித்த கூட்டம் சட்டமுரனானது எனவும் இதன் போது நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சமர்ப்பணங்களின் அடிப்படையில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த மாநாட்டிற்கு திருகோணமலையில் மாவட்ட நீதிமன்றம் இரு வாரங்களுக்கு இடைக்காலை தடை உத்தரவு விதித்துள்ளது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கினை திருகோணமலை சாம்பல்தீவு - கோணேஷபுரியைச் சேர்ந்த சந்திரசேகரம் பரா என்பவர் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஊடாக இவ் வழக்கினை தாக்கல் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்த வழக்கில் மாவை சேனாதிராஜா, எஸ். ஸ்ரீதரன், எம். சுமந்திரன், சண்முகம் குகதாசன் உட்பட தமிழரசு கட்சியின் ஏழு முக்கியஸ்தர்கள் எதிர் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதே போன்ற தடையை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றமும் விதித்துள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வரணி கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நுழைவாயில் திறப்பு விழா






வரணி கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அமரர்கள் கதிரன் கந்தையா கந்தையா நந்தகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப் பெற்ற நுழை-வாயில் திறப்பு விழா 12-2-2024 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாட-சாலை வளாகத்தில் அதிபர் நா.கண்ணதாசன் தலைமை-மயில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் சி.கந்தசாமி பாடசாலை பழைய மாணவர் க.கிருஷ்ணகுமார் கௌரவ விருந்தினராக ஜே342 கரம்பைக்குறிச்சி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.சிவபாதசுந்தரம் மதிப்புறு விருந்தினராக திருமதி. கந்தையா செல்லம்மா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உயர்திருவிழாவில் இரு வழிப் பயண கட்டணம் ரூ 3,000 அறவிடப்படும்

## யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவிப்பு



வரலாற்றுச் சிறப்புமிக்க புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உயர் திருவிழாவானது, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அவர்களது ஒருங்கிணைப்பின் கீழ், ஆயர் இல்லம் யாழ்ப்பாணம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினதும் முழுமையான ஒத்துழைப்புடன் எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் அதற்கு எற்பாடு கள் முழுமையாக பூர்த்தி செய்துள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் ஊடக அறிக்கை மூலம் இன்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 2024.02.23 ஆந் திகதி காலை 5.00 மணி தொடக்கம் மு.ப 10.00 மணி வரை அரச பேரூந்துகள் மற்றும் தனியார் பேரூந்துகள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிக்கட்டுவான் வரை சேவையில் ஈடுபடும். கச்சதீவுக் கான படகுச் சேவையானது குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து 2024.02.23 ஆந் திகதி காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயண கட்டணம் ரூ.1500 ஆகும். வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப்படகுகளில் திருவிழாவிற்கு செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக்கொள்வதுடன் படகுகளில் பயணம் செய்பவர்கள் தனித்தனிப் படகாக பயணம் செய்யாது குழுவாக இணைந்து பாதுகாப்பான முறையில் பயணிப்பதுடன் 2024.02.23 ஆந் திகதி 6.00 முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்கவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடிநீர் ஏற்பாடு களுடன் வருகைதருதல் வேண்டும்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர் களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப் பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது - என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக சினிமா கலைஞர் நிகழ்வுகள் தொடர்பில் யாழ் தலைமைகள் கலந்து பேசி பொது முடிவெடுக்க வேண்டும்

## யாழ்ப்பாண முற்றவெளி சம்பவம் தொடர்பில் மனோ கணேசன்



யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துாரதிஷ்ட சம்பவங்கள், இலங்கை - தமிழக கலாச்சார உறவுகளுக்கு பாதகமாக அமைந்து விடக்கூடாது. இப்படியான பிரமாண்டமான கலை நிகழ்வுகள் நடத்தப்படும் போது, அவற்றுக்கான விதிமுறைகள் நடைமுறைக்கு வர வேண்டும். தமிழக சினிமா ஒரு பிரமாண்டமான பணம் கொழிக்கும் வியாபாரம். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. அதனால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களே அதில் இருக்கிறார்கள். அதேவேளை, வடக்கில், "இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்" என்ற ஒரு சிந்தனை நிலைப்பாடும் இருக்கிறது. இவை அனைத்தையும் கணக்கில் எடுத்து, யாழ் மாவட்ட எம்பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸ், யாழ் மாநகரசபை, சிவில் சமூகம் ஆகியோர் யாழ் மாவட்ட ஒருகிணைப்பு குழுவில் கூடி அமர்ந்து பேசி தீர்மானிக்க வேண்டும். சினிமா கலைஞர்கள் அழைத்தால் வருவார்கள். வேண்டாம் என்றால், வர மாட்டார்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது, யாழ்ப்பாண முற்றவெளியில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துாரதிஷ்ட சம்பவங்களை கடந்து போக வேண்டும்.

இதை விட இசை நிகழ்வு கலவர பூமியாக மாறி, பலர் கொலையுண்ட சம்பவம் கொழும்பில், 2004ம் வருட டிசம்பர் மாதம் நிகழ்ந்தது. பொலிவுட் நடிகர் ஷாருக் கான் கலை நிகழ்ச்சி நடத்த கொழும்பு வந்த போது, குண்டு வீசப்பட்டது. நடிகர், ஷாருக், அப்படியே திருப்பிக்கொண்டு விமான நிலையம் போனவர்தான். இன்று, அவரது உலக வரைபடத்தில் இலங்கை இல்லையாம்.

அந்த வெடிப்பில், எனது சில நண்பர்கள் உட்பட, பல ரசிகர்கள் இறந்தார்கள். பிர-பல சோம தேரரின் நினைவு தினமன்று இந்த கலை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடாகி இருந்ததால், அந்த நிகழ்வை சிங்கள - பௌத்த தீவிர அமைப்பினர் எதிர்த்து போராடியதால், ஒரு பதட்ட நிலைமை அன்று நிலவியது. அதையடுத்து, இத்தகைய கலை நிகழ்வுகள் தொடர்பில், பல விதிமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன.

சினிமா ஒரு தொழில். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. பணம் கொடுத்தால், சகாரா பாலைவனத்திலும் அவர்கள் ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். சினிமா, பணம் கொழிக்கும் வியாபாரம் என்பதால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களே அதில் இருக்கிறார்கள். கலைஞர்களை அழைத்தால் வருவார்கள். வர வேண்டாம் என்றால் வர மாட்டார்கள். இலங்கை வந்து செல்வது என்பது மிகப்பெரும் பணம் கொழிக்கும் முன்னணி வருவாய் இல்லை. பக்கத்தில் இருக்கும் நாடு என்பதால், சடுதியாக வந்து விட்டு, ஆடி, பாடி, நிகழ்வு நடத்தி போகலாம் என்று வருகிறார்கள்.

இனி எம்பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸ், யாழ் மாநகரசபை, சிவில் சமூகம் ஆகியோர் யாழ் மாவட்ட ஒருகிணைப்பு குழுவில் கூடி அமர்ந்து பேசி, இப்படியான நிகழ்வுகளுக்கு விதிமுறைகளை அறிவிக்கலாம். முழுக்க, முழுக்க ஏற்பாட்டாளர்களின் கைகளில் மட்டும் பொறுப்புகளை வழங்கி விட்டு, ஒதுங்க கூடாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட யாழ் மாவட்ட எம்பிக்களுக்கு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பும், அதிகாரமும் உண்டு.

இளம் தலைமுறையினர், இசையை கேட்க, நட்சத்திரங்களை பக்கத்தில் போய் பார்க்கத்தான் ஓடி வந்தார்கள். அதற்குள் போதையில் சிலர் இருந்திருக்கலாம். இப்படியான ஒரு தரப்பு இளையோர் எங்கும் உள்ளார்கள். கொழும்பிலும், சென்னையிலும், லண்டனிலும், சிக்காகோவிலும் உள்ளார்கள். முற்றவெளியில், ஒலி அமைப்பு அரங்கத்தின் மீது இளை-யோர் ஏறி நின்றார்கள். பாரம் தாங்காமல் அந்த அரங்கு உடைந்து போயிருந்தால், பெரும் உயிர் சேதம் ஏற்பட்டு இருக்கலாம்.

இன்று, கொழும்பில் இந்நிகழ்வுகள் நடக்கின்றன. தொடர்ந்தும் நடக்கும். யாரும் வந்து முறைப்படி பார்க்கலாம். அதற்கான கட்டமைப்புகள் இங்கே இருக்கின்றன. கொழும்பை போன்று, யாழில் உள்ளக, வெளியக அரங்க கட்டமைப்புகள் இல்லை. கொழும்பிலும், சுகததாச உள்ளக அரங்கில் அதிகபட்சம் ஐயாயிரம் பேர் கூடலாம். இலட்சக்கணக்கில் கூட உள்ளக அரங்கு சரிவராது. வெளியக விளையாட்டரங்குதான் சரி.

யாழில் கலாச்சார மண்டபத்தை ரூ.200 கோடி அளவில் முதலிட்டு கட்டிக்கொடுத்த இந்திய அரசுக்கு அப்போது, இந்த முற்றவெளியை, கொழும்பு சுகததாச அரங்கம் மாதிரி கட்டிக்கொடுங்கள் என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவில் யோசனை முன்வைத்து கூறி இருக்கலாம். இனியாவது, வெளிநாட்டு அரசுகளோ, புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளோ, இதை செய்யலாம். உள்நாட்டில் அடுத்த பல வருடங்களுக்கு பணம் இல்லை.

அடுத்து, "இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்" என்று கூறும் கருத்தும் சமாந்திரமாக இழையோடுகிறது. இது ஒரு தமிழ் தேசிய அரசியல் நிலைப்பாடு. இதை மறைக்க முடியாது. அப்படி இல்லை என்று கூறவும் முடியாது.

ஆகவே, இது தொடர்பிலும், அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் இடையே கலந்துரையாடல் நடக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக மக்களின் நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்குமானால், விடை சுலபமானது. யாழ்ப்பாணத்தில் இனிமேல் தமிழக சினிமா கலைஞர்களை கொண்டு இத்தகைய ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்தாமல் விடலாம்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழில் நடந்த "இசைக் கலவரம்"

"யாழ் இசைக் கலவரத்தினால் கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியத்தின் விளை நிலமான யாழ்ப்பாணத்தின் மாண்பு மாசுபடுத்தப்பட்டுள்ளதுடன் நடிகை தமன்னாவின் "காவாலா" ஆட்டத்தை பார்க்க ஆசைப்பட்ட யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இன்று "காவாலி" களாக்கப்பட்டுள்ளார்கள்"

- கே. பாலா




தென்னிந்திய சினிமா பிரபலங்கள் அழைத்துவரப்பட்டு யாழ்ப்பாணத்தில் இசை, கலை நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால் கலை, கலாசார, பண்பாட்டு சீர்கேடுகள் ஏற்படும் என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பிரபல பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட கலவரம் இவ்வாறான குற்றச் சாட்டுக்களை புறந்தள்ளிவிட முடியாது என்பதனை நிரூபித்துள்ளதுடன் இவ்வாறான "கலை நிகழ்ச்சிகள்" என்றபெயரில் நடக்கும் "காசு பிடுங்கும்" பின்னணியையும் அம்பலப்படுத்தியுள்ளது.

நெதேர்ன் யுனிவர்சிற்றி என்கிற தனியார் நிறுவனத்தால் இந்த இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து சென்று கனடாவில் வசிக்கக்கூடிய தமிழ் தொழிலதிபரான இந்திரன் என்பவரின் நிறுவனமே நெதோன் யுனிவர்சிற்றி. இந்திரன் அவரது மனைவியான நடிகை ரம்பா இவர்களின் நிறுவனம் தான் வலி. வடக்கில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து முன்னாள் இலங்கை ஆட்சியாளர்களான ராஜபக்சக்களால் கட்டப்பட்ட அரச மாளிகையை பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் ரணில் அரசுடன் இரகசிய மாகப் பேச்சு நடத்தி தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக பெற்றுக்கொண்டுள்ளது.

பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்ச் சியையும் நெதேர்ன் யுனிவர் சிற்றியை பிரபல்யப்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். அந்தநிறுவனம் வெளிநாட்டுப்பல்கலைக்கழங்களின் பட்டங்களை தொலைக் கல்விமுறை மூலம் இங்கு வழங்கும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது. எனவே அதற்கு ஆட்களைத் திரட்டுவதற்கான ஒரு "புரொமோசன்" நிகழ்ச்சியாகவே 'Hariharan Live in Concert and Star Night" என்ற இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தாங்கள் இந்த நிகழ்ச்சியை பல கோடிகள் செலவழித்து நடத்துவதாகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு தமிழ் மக்களை மகிழ்விக்கவே நடத்துவதாகவும் ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுவோம் என்றெல்லாம் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் நிகழ்ச்சி முழுக்க முழுக்க "பணம் பிடுங்கும்" நோக்கத்திலான ஏற்பாடுகளுடன்தான் நடந்தது.



யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஹரிகரனின் "Hariharan Live in Concert and Star Night" என்ற இசைநிகழ்ச்சியை நடத்த கடந்த டிசம்பர் மாதம் ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் பின்னர் சீரற்ற காலநிலை காரணமாக நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டு 9 ஆம்திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. ஆரம்பத்தில் இசை நிகழ்ச்சி இலவசமாக ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் பின்னர் ஆசனங்களுக்கு ஏற்ற வகையில் கட்டணங்கள் அறிவிக்கப்பட்டு ரிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன.

அதேபோன்று இசை நிகழ்ச்சியில் பங்குபற்றும் பிரபலங்களுடன் விருந்து அருந்தி புகைப்படமெடுக்க 30ஆயிரம் ரூபா அறவிடப்படும் என வெளியான அறிவிப்பு யாழ்ப்பாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் கலை நிகழ்ச்சியை பார்வையிட 25000, 7000, 3000 ரூபாக்களும் என்ற அடிப்படையில் ரிக்கெட்கள் விற்பனை செய்யப்பட்டு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதுடன், இலவசமாக நின்றவாறும் இசை நிகழ்ச்சியை பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த இசை நிகழ்ச்சியில் பங்கேற்க பிரபல தென்னிந்திய பாடகர் ஹரிகரனுடன் தென்னிந்திய சினிமா பிரபலங்களான நடிகைகளான தமன்னா, ரம்பா, ஐஸ்வர்யா ராஜேஷ் பிரபல நடன இயக்குநர் கலா மாஸ்டர், நடிகர்கள் சிவா, யோகிபாபு பாலா, சாண்டி மாஸ்டர், சின்னத்திரை நடிகர், நடிகைகளான சஞ்சீவ், திவ்ய தர்சினி, ஆல்யமானசா, நந்தினி, மகா லட்சுமி உள்ளிட்ட பலர் யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக 8 ஆம் திகதி வியாழக்கிழமை மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

பொலிஸ் மற்றும் தனிப்பட்ட பாதுகாவலர்களின் பாதுகாப்புடன் கலை நிகழ்ச்சி திட்டமிட்டவாறு 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பமான போது கட்டணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் பெரும்பாலானவர்கள் அனுமதிச் சீட்டுகள் இல்லாமல் நுழைந்ததால் கலவரம் ஏற்பட்டது. 25000 ரூபா, அனுமதிச் சீட்டு, 10000 ரூபா, அனுமதிச் சீட்டு, 5000 ரூபா அனுமதிச் சீட்டு என கட்டணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்தும் அதன்பின்னே இலவசமாக நின்றவாறும் இசைநிகழ்ச்சியை பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் கட்டணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் பெரும்பாலான கூட்டம் அனுமதிச் சீட்டுகளே இல்லாமல் தடுப்புகள் உடைக்கப்பட்டு பலர் குறுகிய இடத்திற்குள் நுழைந்ததுடன், பணம் செலுத்தியும் கதிரைகள் இல்லாமல் நின்றவர்களோடு மோதுண்டு பலர் நிலைதடுமாறி கீழே விழுந்ததையடுத்து பெரும் மோதல் நிலை உருவானது.

இக்கலவரத்தினை அடக்க மேலதிக பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்ட போதும் நிலைமை கட்டுங்கடங்காது சென்றது. கதிரை, தண்ணீர் தாங்கி உள்ளிட்ட பல பொருட்கள் சேதமாகின. பலர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். நடிகை ரம்பாவின் கணவரின் தனிப்பட்ட பாதுகாவலர்களினாலும் கடுமையாக தாக்கப்பட்டனர். பொலிஸாரும் ரசிகர்கள் மீது மிலேச்சத்தனமாக தாக்குதல்களையும் நடத்தினர். இதன்போது ஒருவர் மயக்கமுற்றதுடன் மேலும் பலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

இக் கலவரத்திற்கு நிகழ்ச்சி குறித்த அறிவிப்புகள், நுழைவுச்சீட்டுகளினால் ஏற்பட்ட குழப்பங்கள், பங்கேற்கும் கலைஞர்களில் இறுதி நேரத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள், மைதான ஏற்பாடுகள், பாதுகாப்பு சார் குறைபாடுகள். போதைப் பொருள் பாவனையாளர்கள் என பல்வேறு சர்ச்சைகள் குழப்பத்தின் காரணிகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன. மேலும், இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்த புலம்பெயர் முதலீட்டார் யாழ் பலாலி விமான நிலையத்தில் தெரிவித்திருந்த கருத்தும் பலரிடம் விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதுமட்டுமன்றி இந்த இசை நிகழ்ச்சியில் திட்டமிடப்பட்டு குழப்பம் ஏற்படுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த இசை நிகழ்ச்சியை நடத்துவது தொடர்பில் ஆரம்பம் முதலே எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வந்தன. சமீப காலமாக தென்னிந்திய பிரபலங்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து நிகழ்ச்சிகள் நடத்தும் போக்குகள் அதிகரித்து வருகின்றன.இதனை கலாசார ஒழுங்கீனம் என்று குறிப்பிட்டு வரும் ஒரு தரப்பினர் இவ்வாறான நிகழ்வுகளுக்கு எதிரான கருத்துகளையும் வெளியிட்டு வந்தனர்.

அது போலவே இந்த இசை நிகழ்வுக்கும் ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டு வந்தனர். அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி மு.தம்பிராசா நடத்திய ஊடக சந்திப்பிலே "யாழ்ப்பாணம் என்பது தமிழர்களுடைய பண்பாட்டுக்கும் கலாசாரத்திற்கும் உலக அளவில் பெயர் பெற்ற இடமாகும். இந்திய திரைப்படங்களில் கூட யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தைப் பற்றி பெருமையாக பேசியுள்ளார்கள். ஆனால், இங்கே சினிமா நடிகைகளை அழைத்து வந்து அவர்களோடு புகைப்படம் எடுப்பதற்கு பணம் பெறுகின்ற கேவலமான செயலை குறித்த தனியார் நிறுவனம் நடத்த முற்படுகின்றது.

உண்மையிலேயே புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வந்து இங்கே முதலீடுகளை செய்பவர்களினால் எங்களுடைய மக்களுக்கோ அல்லது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பையும் அல்லது பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டுமே அல்லாமல் இளைஞர்களை திசை திருப்பும் முகமாக எமது தமிழ் இளைஞர்களின் தமிழ் தேசிய உணர்வை மழுங்கடிக்கும் முகமாக இவ்வாறு நடிகைகளோடு கட்டணம் கட்டி புகைப்படம் எடுக்கின்ற செயற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த இசைநிகழ்வானதுயுத்தத்தால்பாதிக்கப்பட்ட மக்களைமகிழ்விக்கவும் அவர்களை ஆற்றுப்படுத்தவும் இலவசமாகவே நடத்துகின்றோம் என்று சொல்லி நிகழ்வு ஒழுங்குகளை செய்தவர்கள் இன்றைக்கு 25,000 ரூபா பெற்று டிக்கெட் விநியோகிப்பதை நாங்கள் கண்டு கொண்டிருக்கின்றோம். இலட்சக்கணக்கான பணத்தினை பெற்று யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளவர் எங்கள் மக்களுடைய கலாசாரத்தை அழிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தின் பண்பாட்டை சீர்குலைக்கும் முகமாக இவ்வாறான செயற்பாட்டை நடத்த முற்படுகின்றார். இவ்வாறான நிகழ்ச்சிகளின் பெயரால் எங்கள் மக்களை வைத்து வியாபாரம் செய்வார்களானால் அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு எந்த அளவுக்கு சென்று போராடவும் ஒருபோதும் பின்நிற்காது. இவற்றை தென்னிந்திய நடிகைகளும் நடிகர்களும் உணர்ந்து எங்கள் மக்களுடைய வலிகளையும் துன்பங்களையும் உணர்ந்து கொண்டு செயல்பட வேண்டும். இல்லையேல் நீங்கள் தங்கியுள்ள இடங்களை முற்றுகையிடுவோம் என எச்சரித்திருந்தார்.

இந்த இசைக் கலவரத்திற்கு இவ்வாறு பல காரணங்கள், குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் யாரை மகிழ்விப்பதற்காக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்களோ, அவர்களின் 25000. 10000. 3000 ரூபாவுக்கு டிக்கெட் வாங்க முடியாத ஏழ்மையை காரணம் காட்டி அவர்களைத் தூரத்திலேயே "நின்று பார்க்கும் பார்வையாளராக நிறுத்தி வைத்ததன் விளைவே இந்த "இசைக் கலவரம்". போரால் பாதிக்கப்பட்டு. பொருளாதார நெருக்கடியால் சின்னாபின்னமாகி நின்ற யாழ்ப்பாணத்து சாதாரண மக்கள் கூட்டத்தால் தூரத்தில் தெரிந்தஇசை மேடையையும் வர்ண விளக்குகளையும் மட்டும்தான் பார்க்க முடிந்ததே தவிர, நடிகர் நடிகைகளை அவர்களினால் பார்க்க முடியவில்லை. அந்த கவலை, இயலாமை, கோபம் ஆகியவற்றின் வெளிப்பாடே இன்று யாழ் இளைஞர்களை தென்னிந்திய, தென்னிலங்கை, சமூக ஊடகங்கள் "காவாலிகளாக", "காடையர் கூட்டமாக" அடையாளப்படுத்த காரணமாகியுள்ளது.

இந்த "இசைக் கலவரம்" திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதா அல்லது ரசிகர்களின் ஆர்வக்கோளாறினால் ஏற்பட்டதா என்பது ஒருபுறமிருக்க இந்த இசைக் கலவரத்தினால் கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியத்தின் விளை நிலமான யாழ்ப்பாணத்தின் மாண்பு மாசுபடுத்தப்பட்டுள்ளதுடன் நடிகை தமன்னாவின் "காவாலா" ஆட்டத்தை பார்க்க ஆசைப்பட்ட யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இன்று "காவாலி" களாக்கப்பட்டுள்ளார்கள்.





# 74 வருடங்களின் பின் தமிழரசுக் கட்சிக்குள் வலுத்துள்ள ஆதிக்கப் பனிப்போர்

– வி. தேவராஜ் -- மூத்த ஊடகவியலாளர் –

jமிழரசுக் கட்சியின் 74 வருடகால வரலாற்றில் முதன்முறையாக கட்சியின் தலைவருக்கான தேர்தல் நடந்து முடிந்துள்ளது. மழை விட்டாலும் தூவானம் தொடர்வது போல் தமிழரசுக் கட்சியின் நியமனங்கள் குறித்து இன்றும் பேசு பொருளாகவே உள்ளது. இந்த விடயம் தமிழர் தரப்பில் மாத்திரமல்ல தென்னிலங்கை ஊடகங்களிலும் பேசு பொருளாக உள்ளது.

தமிழரசுக் கட்சிக்குள் இன்று நிலவுகின்ற பனிப்போர் யார் தமிழரசுக் கட்சியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பது குறித்தாகவே உள்ளது. தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறீதரன் அணியினரும் தலைவருக்கான தேர்தலில் தோற்றுப்போன சுமந்திரன் அணியினரும் களத்தில் நிற்கின்றனர். சிறீதரன் அணியினர் தம்மை முழுமையாக தமிழரசுக் கட்சிக்குள் நிலை நிறுத்திக் கொள்வதற்காகவும் சுமந்திரன் அணியினர் இழந்து போன தலைமைப் பதவிக்கு ஈடாக பொதுச் செயலாளர் பதவியைத் தாம் சார்ந்தவரை அமர்த்தி தக்க வைத்துக் கொள்வதற்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றனர். தமிழரசுக் கட்சியில் பொதுச் செயலாளர் பதவி எத்துணை சக்திமிக்கது என்பது சுமந்திரன் அவர்களுக்குத் தெரியும். பொதுச் செயலாளர் பதவியில் தனக்குச் சார்பானவரை அமர்த்திக் கொள்வதன் மூலம் தமிழரசுக் கட்சிக்குள் தனது பிடியினை தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதும் சுமந்திரன் அவர்களுக்குத் தெரியும்.

அதேவேளையில் சுமந்திரனின் பிடி கை நழுவிப் போவதென்பது தமிழரசுக் கட்சியில் சுமந்திரனின் இருப்பை மாத்திரமல்ல சுமந்திரன் அணியினரின் எதிர் காலத்தையும் கேள்விக்குறியதாக்கிவிடும் என்ற அச்சத்திற்குள் அந்த அணியினர் மூழ்கிக் கிடக்கின்றனர். ஆனால் சுமந்திரன் தான் எதிர்பார்த்திருந்த தலைமைப் பதவி பறிபோன நிலையிலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஒருபுறம் சிறீதரனின் கைகளைப் பற்றிக் கொண்டு ஒன்றிணைந்து பயணிக்கத் தயார் என ஆதரவாளர்கள் மத்தியில் நேசக் கரம் நீட்டிய அதே வேளையில் மறுபுறம் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை நோக்கிக் குறி வைக்கத் தொடங்கிவிட்டார். தலைவர் பதவியை விட பொதுச் செயலாளர் பதவியின் ஊடாக கட்சியை மாத்திரமல்ல கட்சி உறுப்பினர்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம் என்பதை சட்டத்தரணி மூளை மாத்திரம் அல்ல ஏற்கனவே அவர் வகித்த பொதுச்செயலாளர் பதவிக்கூடாக அவர் சாதித்துக் கொண்ட மற்றும் பெற்றுக் கொண்ட வெற்றிகளின் சுவையினை நன்கறிவார். எனவேதான் சாணக்கியமாக தமிழரசுக் கட்சியின் ஒற்றுமையை முன்னிறுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தைப் பழி வாங்கியதுடன் பொதுச் செயலாளர் பதவியை தனக்குச் சார்பான குகதாசனின் பெயரை முன்மொழிய வைத்து திருகோணமலை நேக்கி லாவகமாக நகர்த்திவிட்டார்.

அதாவது சுமந்திரன் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்திக் கொண்டார். ஒன்று பொதுச் செயலாளர் பதவி என்பது கிழக்கு மாகாணத்துக்குரியது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கென வழங்கப்படும் எழுதப்படாத வரலாற்றைக் கொண்டுள்ளது. கிழக்கு மாகாணம் என்பது மட்டு மாவட்டம் மாத்திரமல்ல திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டமும் உள்ளடங்கும் என்ற வகையில் பொதுச்செயலாளர் பதவியை திருமலைக்கு சுமந்திரன் மாற்றிக் கொண்டார்.

இரண்டாவது தமிழரசுக் கட்சியின் மீதான தனது கட்டுப்பாட்டை மீண்டும் நிலை நிறுத்திக் கொண்டார். மொத்தத்தில் தமிழரசுக் கட்சி மீண்டும் சுமந்திரனின் கட்டப்பாட்டுக்குள்ளேயே வந்துவிட்டது. இது சிறீதரன் அணியினருக்கு சிவப்பு விளக்காக மாறிவிட்டது. மறுபுறம் சுமந்திரன் தலைவர் பதவிக்கான தேர்தலில் தோற்றாலும் தமிழரசுக் கட்சிக்குள் தன்னை மீள நிலை நிறுத்திக் கொண்டமை சுமந்திரனின் ஆதரவாளர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

□ பச்சை மண்ணும் சுட்ட மண்ணுமாக பயணம்.

ஆனால் சுமந்திரனின் நகர்வுகள் அனைத்துமே இன்று தமிழரசுக் கட்சிக்குள் புகைந்து கொண்டிருக்கின்றது. மொத்தத்தில் இரண்டு அணியாகிவிட்ட தமிழரசுக் கட்சி பச்சை மண்ணும் சுட்ட மண்ணுமாக இரண்டாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மையாகும். மொத்தத்தில் பொதுச் செயலாளர் பதவி கால அளவில் பங்கிடப்பட்டு சமரசம் காணப்பட்ட போதும் ஒரு வருடகால இடைவெளிக்கப்பால் விரிந்து பரந்ததாக பிளவு ஆழமாக நீறு புத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாகக் கொள்ளப்படும் நிலையில் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அவர்களின் கை தேர்தலை நோக்கிய களை எடுப்புக்களுக்காகக் காத்திருக்கின்றன. அவ் வேளையில் சிறீதரன் அணியினரில் எத்தனை பேரின் தேர்தல் கனவில் மண் விழும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

நடைபெறாத உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களுக்காக தனது ஆதரவாளர்களையும் முன் நிறுத்தி தமிழரசுக் கட்சி தனி வழி போக வழி சமைத்ததுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவுக்குக் காரணமாக இருந்ததாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் குற்றம் சுமத்தின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்றபட்ட நிலை எதிர் காலத்தில் தமிழரசுக் கட்சிக்கும் உருவாகலாம் என்ற ஆரூடங்கள தற்போது கூறப்படுகின்றன.

அதேவேளையில் தான் கொண்டிருந்த கடந்தகால நிலைப்பாடு தனது தோல்விக்கான காரணம் என்பதை நேர்காணல்களில் ஒப்புக் கொள்ளும் சுமந்திரன் அந்த நிலைப்பாட்டை திடீரென மாற்றிக் கொள்ள முடியாது என்றவாறான பதிலை தன்னுடனான நேர்காணல்களில் தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது தமிழரசுக் கட்சி தலைவருக்கான தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்காக தனது கடந்தகால நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள தயாராக இல்லை என்பதுதான் அவரது பதிலாக உள்ளது. மொத்தத்தில் தனது நிலைப்பாட்டுக்கேற்ற வகையில் தமிழரசுக் கட்சியை முழுமையாக மாற்றி அமைப்பதே அவரது அடுத்த பணியாக உள்ளதென்றே கொள்ள முடியும். பொதுச் செயலா-ளராக மாறியுள்ள குகதாசன் மூலமாக உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் மூலம் தனது நிலைப்பாட்டுக்கு சாதகமானவர்களைக் கொண்டு கட்டி எழுப்பலாம் என்பது சுமந்திரன் அவர்களது திட்டமாக இருக்கலாம்.

□ கட்சியின் கோட்பாடு மக்கள் நலன் எல்லாம் எங்கே?

ஒரு கட்சிக்கான தேர்தலிலேயே இத்தனை போட்டிகள் கழுத்தறுப்புகள் இருப்பதானது கட்சியின் கோட்பாடு தமிழ் மக்களின் நலன் என அனைத்துமே மண்போட்டு மூடப்பட்டவைகளாகவே உள்ளன. இன்று அனைத்து தமிழ் தரப்பினரும் பேசுகின்ற தமிழ்த் தேசியம் தாயகம் எல்லாமே வெறும் கட்சிகளின் கதிரைகளுக்கான ஓட்டமாகவே உள்ளது. இதே பாணியிலேயே தமிழ் அரசியல் கட்சிகளின் தேசிய சர்வதேச அரசியலும் கட்சிகளின் கதிரைகளை அலங்கரிப்பவர்களினதும் அவர்களது கூட்டாளிகளினதும் அரசியல் சுய நலன்களே மக்களின் நலன்களின் மற்றும் ,னத்தின்பேரில் அரங்கேற்றப்படுகின்றது. தமிழரசுக் கட்சியின் தேர்தல் இதனைத் துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றது. இது தமிழரசுக் கட்சிக்கு மட்டும் உரித்தான பண்பு என்று கொள்வதற்கு அப்பால் அனைத்து அமைப்புக்களுக்கும் பொதுவான பண்பாக உள்ளது. குறிப்பாக அரசியல் கட்சிகளில் அது வடக்குக் கிழக்கிற்கு மாத்திரமல்ல மலையகத்தையும் உள்ளடக்கியதாகவே உள்ளன.

தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் சிறீதரன் 184 வாக்குகளையும் சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்றனர். 47 மேலதிக வாக்குகளால் சிறீதரன் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

□ தேசியம் குறித்த பலப் பரீட்சையா?

தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தல் தேசியத்திற்கும் தேசியத்திற்கு எதிரான சக்திகளுக்கும் இடையிலான பலப் பரீட்சை என நோக்கப்படுகின்றது. அதனடிப்படையில் தேசியம் வென்றதாகவும் கூறப்படுகின்றது. இன்னும் ஒரு சாரார் சுமந்திரனுக்கு எதிரான வாக்குகளே சிறீதரனின் வெற்றியை தீர்மானித்ததாக தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் நின்று அவர் செயற்பட்டதானது அவர் தலைவரானால் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான பாதையில் தமிழரசுக் கட்சியின் பயணம் விரைவுபடுத்தப்பட்டுவிடும். அதனைத் தடுத்து நிறுத்தும் முகமாகவே சுமந்திரனுக்கு எதிரான சக்திகள் வாக்களித்துள்ளன என்றும் விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன.

□ எதிர்கால அரசியல் நாற்காலிகளுக்கான போராட்டம்.

இந்த தேர்தல் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான தரப்புக்கும் எதிரத் தரப்பினருக்குமான களமாக அமைந்ததாக மேலோட்டமாகக் குறிப்பிடப் படுகின்ற போதும் உண்மையில் 90 சதவீதம் அவ்வாறானதல்ல என்று கூறுவதே பொருந்தும். ஏனெனில் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலுக்கு முன்பாக சுமந்திரன் அவர்களை மிக மோசமாக விமர்சித்தவர்களில் பலர் தேர்தலின் போது சுமந்திரனுக்கு வாக்களித்துள்ளனர். அவ்வாறு வாக்களித்தவர்கள் பகிரங்கமாகவே ஒத்துக் கொண்டுள்ளனர். அத்துடன் சுமந்திரன் அவர்களின் தெரிவான குகதாசன் அவர்களை பொதுச் செயலாளராக ஏற்றுக் கொள்ளாவிடில் நீதிமன்றம் செல்ல வேண்டும் என்றும் ஊடகப் பரப்பில் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் தேசியம் - தேசியத்திற்கு எதிர் என்ற கருத்தியலுக்கு அப்பால் உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்ற கதிரைகளுக்கான கனவில் போடப்பட்ட வாக்குகளாகும். தேசியத்தை நேசிப்பவர்கள் ,ருந்திருக்கலாம். அவர்களின் எண்ணிக்கை சொற்பமானதே. இந்த சொற்பமானவர்கள் தவிர்ந்த மற்றவர்களின் உண்மையான முகம் தேர்தல் காலங்களில் வெளிச்சத்துக்கு வரும்.

□ கூட்டமைப்பின் சிதைவுக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

அத்துடன் தமிழ் மக்களுக்கான விடிவுப் பாதையை நோக்கி நகர்வதற்கான களமாகவும் இந்தத் தேர்தலைப் பார்க்க முடியாது. ஏனெனில் 2009 ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின்னரான கடந்த 15 வருடகால தமிழரசுக் கட்சியின் அரசியல் நகர்வுகளில் இந்தத் தேர்தலில் வாக்களித்த அனைத்து தரப்புக்களுக்கும் பங்குண்டு. குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெயரில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் நலன்சார்ந்த நகர்வுகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவுக்கு தலைமை மாத்திரமல்ல தலைவருக்கான தேர்தலில் வாக்களித்த தமிழரசுக் கட்சியின் தூண்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

□ முள்ளிவாய்க்கால் பேரவலத்தின்போதான மொனத்துக்கும் பதில் கூற வேண்டும்.

அதே வேளையில் முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து கொண்டிருந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மௌனம் காத்து மக்கள் அழிவைத் தடுக்காது இருந்தமைக்கான குற்றத்தை தமிழரசுக் கட்சியின் தலைமை மாத்திரமன்றி தமிழரசுக் கட்சிக்கான தலைவருக்கான தேர்தலில் வாக்களிக்க முண்டியடித்த உறுப்பினர்களும் ஏற்றாக வேண்டும்.

□ வென்றவர் அணி வீழும்வரை அல்லது சமரசம் ஏற்படும் வரை போட்டி தொடரலாம்?

உண்மையில் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் "தோல்வி வெற்றியாகவும்" - "வெற்றி தோல்வியாகவும்" அமைந்திருக்குமாயின் தேசியத்தின் போக்கினை திசை மாற்றுவதற்கான பச்சை விளக்காக மாறியிருக்கும் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் அது உண்மை இல்லை. தற்போது தமிழரசுக் கட்சியின் உள்ளக நகர்வுகளை உற்று நோக்கினால் தமிழ்த் தேசியத்தின் போக்கினைத் திசை மாற்றும் நகர்வுகளுக்கு வலு சேர்ப்பதாகவே உள்ளது. இந்த இலக்கை நோக்கிய பயணத்திற்கு தமிழரசுக் கட்சிக்குள் சீரமைப்பு என்ற போர்வையில் களை எடுக்கும் பணிகள் துரிதப்படுத்தப்படலாம். அந்த வகையில் தமிழரசுக் கட்சிக்குள் வென்றவர் அணி வீழும்வரை அல்லது சமரசத்துக்குப் போகும் வரை தேர்தலின் போது நிகழ்ந்த போட்டி தமிழரசுக் கட்சிக்குள் தொடரப்போகின்றது.


(தொடர்ச்சி 21 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1087



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராாசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கைலாசநாதஉ திருக்கோயில் (நல்லூஉ சிவன்கோயில்) நல்லூஉ, யாழ்ப்பாணம

*" நில்லாத நீஉசடைமேல் நிற்பித்தானை*
*நினையாவென் நெஞ்சை நினைவித்தானை*
*கல்லாதனவெல்லாங் கற்பித்தானைக்*
*காணாதன வெல்லாங் காட்டினானைச்*
*சொல்லாதனவெல்லாஞ் சொல்லி யென்னைத்*
*தொடஉந்திங் கடியேனை யாளாக் கொண்டு*
*பொல்லாவென் நோய்தீஉத்த புனிதன் தன்னைப்*
*புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே."*

நல்லூஉ சிவன்கோயில் தாபகராகிய சிவஸ்ரீ ந.வெ. காஉத்திகேயக் குருககள் அவஉகள், நல்லூஉ சிவன் கோயிலின் ஸ்தாபகராக மட்டுமன்றி, பிரதம குருவாகவும், தஉமகஉத்தாவாகவும் விளங்கியுள்ளாஉ. தமது சந்ததியினஉ சிறப்பாக வாழ இறையருள் துணைபுரியவேண்டும் என்ற நல்நோக்குடன், இவ்வாலயத்தைக் கட்ட எண்ணங்கொண்டாஉ. அதற்கிசைய இறைவன் திருவருள் ஒன்றுகூடி, குருக்களது கனவின்மூலம் கட்டளையிட, நல்லூசிவன்கோயில் கட்டப்பட்டது. ஆரம்பகாலத்தில் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள முழுமுதற்கடவுளாகிய சிவனின் கருவறை, வட்டவடிவான விமானத்தைக் கொண்டதாகவும், அம்பாளின் கருவறை, சதுரவடிவான விமானத்தைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டது. இவற்றோடு யாகசாலை, களஞ்சியஅறை, அந்தணஉசாலை என்பனவும் அமைக்கப்பட்டன. இவ்வாறான பணிகள் நிறைவு பெற்று, அநாவஉத்தன கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இதன்பின்னஉ சிவஸ்ரீ ந.வெ. காஉத்திகேயக் குருக்கள் அவஉகளின் பெருமுயற்சியால் இவ்வாலயம், சிறிது சிறிதாக வளாச்சி பெற்றுக்காணப்பட்டது. 1920 ஆம் ஆண்டளவில் இவ்வாலயத்திலே பல திருப்பணிகள் இடம்பெற்றன. மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், தஉசனமண்டபம் ஆகியன அழகாக அமைக்கப்பட்டன. இத்திருப்பணிகளைத் தொடஉந்து, 1928 ஆம் ஆண்டு, முதலாவது புனராவஉத்தன கும்பாபிஷேகம் பெருவிழாவாக இடம்பெற்றது.

சிவஸ்ரீ ந.வெ. காஉத்திகேயக் குருக்கள் அவஉகளின் இளைய மனைவியாகிய சுந்தரம்மா அவஉகள், இவ்வாலயத்தின் பணிகளில் பெரிதும் தொடஉபுபட்டவராகக் காணப்பட்டுள்ளாஉ. இவஉகளது புத்திரஉகளாக, சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் மற்றும் சிவஸ்ரீ இரத்தினகைலாசநாதக் குருக்கள் ஆகியோரின் பங்களிப்பு, நல்லூஉ சிவன்கோயில் பரிபாலனம் சிறப்பாக நடைபெற பெரிதும் உதவியுள்ளது. தமது சந்ததியினஉ கைலாசநாதஉ ஆலயத்தின் ஆலயபரிபாலகஉகளாகத் திகழ, "கைலாசநாதன்" என்ற பெயரை, தமது பெயருள் கொண்டிருக்கவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை சாசனமாக எழுதிவைத்துள்ளாஉ. அவ்வாறே தமது பிள்ளைகளின் பெயரோடு, கைலாசநாதரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளமை, சிவஸ்ரீ ந.வெ.காஉத்திகேயக் குருக்கள் அவஉகள், கைலாசநாதஉமீது கொண்ட ஆராத பக்திக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

இவ்வாறாக இறைபணியையே தமது உயிஉமூச்சாகக்கொண்டு வாழ்ந்த குருக்கள் ஐயா அவஉகள், 1942 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தாஉகள். இவஉகளின் மறைவுக்குப் பின்னஉ, இவரது பிள்ளைகள் இருவரும் மாணவஉகளாக இருந்தமையால், ஆரம்பத்தில் இவ்வாலய இணை தஉமகஉத்தாக்களாக விளங்கி, தாய்மாமனாகிய முனீஸ்வரம் சிவராமகிருஷ்ண ஐயஉ சாம்பசிவக் குருக்கள் அவஉகளின் உதவியோடு, ஆலய பரிபாலனத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டன.

சிவஸ்ரீ ந.வெ. காஉத்திகேயக் குருக்கள் அவஉகளின் மறைவுக்குப் பின்னஉ, 1945 ஆம் ஆண்டு இராஜராஜேஸ்வரி அம்பாளின் திருவுருவப் பிரதிஷ்டை, நல்லூஉ சிவன் கோவிலில் இடம்பெற்றது. இதன் பின்னஉ ஆலயத் திருப்பணிகள் பல தொடஉந்து இடம்பெற்றன. 1962 ஆம் ஆண்டில் ஆரம்பித்த பல திருப்பணிவேலைகள், 1970களில் பூஉத்தி செய்யப்பட்டது. இதன்பின்னஉ பரிவாரமூஉத்தியாக விளங்கும் ஆறுமுகசுவாமிக்கு, தென்மேற்கு மூலையில் தனியான பரிவாரக் கோயில் அமைக்கப்பட்டு, ஸ்தூபி வேலைகளும் நிறைவேற்றப்பட்டு, 1978 இல் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. இத்திருப்பணிகளை ஆலய பரிபாலகஉகளுள் ஒருவராகிய, சிவஸ்ரீ கா. இரத்தின கைலாசநாதக் குருக்களே நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவஸ்ரீ ந.வெ. காஉத்திகேயக் குருக்கள் அவஉகளின் பின்னஉ, நல்லூஉ சிவன்கோயில் பரிபாலனத்தைத் திறம்பட நடத்திய அவரது புத்திரஉகளாகிய சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள், பெரும் அறிவாளஉ. சமஸ்கிருதத்தில் பட்டம்பெற்றவஉ. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக விளங்கியவஉ. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவஉ.

இளையவராகிய சிவஸ்ரீ கா. இரத்தினகைலாசநாதக் குருக்கள், நல்லூஉ சிவன்கோயில் தஉமகஉத்தாவாகத் திகழ்ந்தாஉ. இவஉ கிரியைநெறிகளில் ஆழ்ந்த புலமையும், அதேநேரத்தில் சோதிடக்கலையில் வல்லுனராகவும் திகழ்ந்தாஉ. இவரது பரிபாலனத்தில் இவ்வாலயம் பலவழிகளிலும் சிறந்து காணப்பட்டது. மூத்தவராகிய சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள், யாழ்பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறையின் தலைவராக நியமனம் பெற்று வந்தபின்னஉ, சகோதரஉகள் இருவரது பரிபாலனத்திலும் இவ்வாலயத்தின் வளஉச்சி பல துறைகளிலும் மேலோங்கிக் காணப்பட்டது.

தொடரும்...




OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

16-02-2024 வெள்ளி தொடக்கம் 22-02-2024 வியாழன் வரையும்




மேஷம்: துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். புண்ணியம் சேரும். பொருளாதாரம் உயரும். உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். மனஅமைதி குறையும். திருமண வாய்ப்புக் கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். தாய் வழி உறவில் கவனம் தேவை. நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.
கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் லாபம் கூடும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். கடுமையான காலம். சிரமங்கள் அதிகரிக்கும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். விரக்திகள் மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். வழக்குகள் வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: 3,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,S




ரிஷபம்: திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும் வாரம். விரக்திகள் மறையும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். வழக்கு வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தேக ஆரோக்கியம் கூடும். நிதி நிலைமை சீராகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். அந்தஸ்து உயரும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக் கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். காரியத்தடை ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. துணிவோடு செயல்படுவீர்கள். தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். உள்ளம் மகிழும். வறுமைகள் ஒழியும். தனலாபம் கூடும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். நண்பர்களால் உதவி உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளி துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 4,8,9,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




மிதுனம்: தொட்டது துலங்கும் வாரம். ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். வெளியூர் பயணம் உண்டு. புதிய தொழில் அமையும். தொழில் வளம் கூடும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் உற்சாகம் கூடும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். வியாபாரம் லாபம் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. புதிய நட்பு உருவாகும். வாகனச் செலவு ஏற்படும். அனுகூலமான காலம். நன்மைகள் நாடி வரும். வராதக் கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் லாபம் தரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீனிவாசப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,4,9,7
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,T




கடகம்: தடங்கல் இல்லாத தன வரவு வரும் வாரம். யோகமான காலம். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும் கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. கமிஷன் தொழில் லாபம் உண்டு. ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். திட்டம் வெற்றி பெறும். பட்டம் பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத காலம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளால் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய தகுதிகள் மேம்படும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பொருளாதாரம் உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஆடை, அணிகலன்கள் சேரும். புது முயற்சிகள் பலன் தரும். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,J



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் "ராஜயோகம்"

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




சிம்மம்: அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான காலம். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத் துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய் வழி உறவால் கவனம் தேவை. மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உடல் பொலிவு கூடும். உற்சாகம் களை கட்டும். வேலை பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். விறுவிறுப்பான காலம். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். புதிய கடன் உருவாகும். தொழில் போட்டிகள் அதிகமாகும். மருத்துவச் செலவு குறையும். பயணம் அனுகூலம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,Y




கன்னி: பொன்னும், பொருளும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். மன உறுதி அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை அகலும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். விரக்திகள் விலகும்.
வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கலனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். குடும்பத்தில் மேன்மை உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். சாதனைகள் ஏற்படும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பணியில் பாராட்டு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். விரும்பியது நிறைவேறும். திருப்பங்கள் நிறைந்த காலம். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புக்கள் அகலும். வேற்றுமைகள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். பாக்கிகள் வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,5,3,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V




துலாம்: வில்லங்கம் விலகும் வாரம். விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, வாங்கும் யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பழையக் கடன் தீரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். அற்புதங்கள் நிகழும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கை கொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். பயணம் பலன் தரும். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். மனைவியின் கோபம் கூடும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். மனம் மகிழும். சீரான வாழ்வமையும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். மன சந்தோஷம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தி தாய், அதிர்ஷ்ட எண்: 4,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




விருச்சிகம்: சுப விரயம் ஏற்படும் வாரம். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. திடீர் செலவு ஏற்படும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். கடன் சுமை குறையும். உடல்வலி தோன்றி மறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. உண்மைகள் வெளிப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தனவரவு உண்டு. குதூகல எண்ணம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீக சொத்துக் கிடைக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். கடன் அதிகமாகும். பேச்சில் பணிவு தேவை. பெற்றோர் ஆலோசனை பலன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவுகள் தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். உறவினர் வருகை உண்டு. நட்பால் பிரிவு ஏற்படும். பால் தானம் செய்வதால் பாவங்கள் விலகும். வரவுகள் அதிகரிக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப் போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். வஸ்திர தானம் வளம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# 74 வருடங்களின் பின் தமிழரசுக் கட்சிக்குள் வலுத்துள்ள ஆதிக்கப் பனிப்போர்

**– வி. தேவராஜ் -- மூத்த ஊடகவியலாளர் –**

**(18ம் பக்கத் தொடர்ச்சி)**

**எழுதப்படாத வரலாறு மாறிவிட்டது.**

கிழக்கு மாகாணம் என்பது மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை என்ற மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியது. அதனடிப்படையில் பொதுச் செயலாளர் பதவி திருகோணமலை குகதாசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்தத் தெரிவு கூட சுமந்திரன் அவர்களின் தெரிவுதான். அதனை தலைவர் சறீதரனுக்கூடாக சாதித்துக் கொண்டார்.தமிழரசுக் கட்சிக்குள் தனது பிடியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்காக சாணக்கியமாகக் காய்களை நகர்த்திய சுமந்திரன் அவர்களின் சாணக்கியம் தமிழர் தரப்பில் சிங்களத் தலைமைகளிடம் தோற்றுப் போகக் காரணம் என்ன என்பதற்கான காரணத்தை அவர்தான் விளக்க வேண்டும்.

பொதுச் செயலாளர் குறித்த பொதுச் சபையின் தீர்மானம் முடிந்த முடிவானது என்பதே சுமந்திரனின் நிலைப்பாடு. இதனை மாற்றுவதாக இருந்தால் ஒரு வருடத்தின் பின் பொதுச் சபை கூடி தீர்மானம் எடுக்கலாம் என்பதும் சுமந்திரனின் நிலைப்பாடு. எனவே இங்கு சமசரத்திற்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் தமிழரசுக் கட்சியின் ஒற்றுமை என்ற கருப்பொருளை மையமாக வைத்து சுமந்திரன் நகர்த்திய காய்களுக்குள் சிறீதரன் சிக்க வைக்கப்பட்டுள்ளார். சுமந்திரனால் பகிரங்கப்படுத்தப்பட்ட கடிதம் மற்றும் நேர் காணல்களில் அவர் கூறியுள்ள விடயங்கள் என்பன எவ்வாறு சுமந்திரன் திட்டமிட்டு தனது பிடியினை தமிழரசுக் கட்சிக்குள் வைத்திருப்பதற்காக குகதாசனை பொதுச் செயலாளர் பதவியில் அமர்த்துவதற்காக மேற்கொண்ட சாணக்கிய நகர்வுகளை தலைவர் தேர்தலுக்குப் பின் மேற் கொண்டார் என்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

சம்பந்தன் ஐயாவின் பிரவேசம்.

இந்த ஒரு பின்னணியில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் அவர்களை கடந்த 13 ஆம் திகதி அன்று (13.02.2024) சந்தித்த கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனிடம்

- சூழ்ச்சிகளை முறியடியுங்கள்.

உட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து உடனடியாக மகாநாட்டை நடத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்.

- இணக்கமின்றேல் தேர்தல்

அத்துடன் இணக்கமின்றேல் கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் ,ணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளைப் பொதுச்சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அத் தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து தேர்தல் மூலம் தெரிவுகளை நடாத்தி 19 ஆம் திகதியே மகாநாட்டையும் நடாத்துமாறும் அவர் மேலும் புதிய தலைவரான சிவஞானம் சிறீதரனுக்கு தெரிவித்துள்ளார். இதற்கு சுமந்திரன மற்றும் அவரது அணியினர் உடன்படுவாரா என்பது கேள்விக்குறியே.

நீதிமன்றில் தமிழரசுக் கட்சி

எனவே எதிர்பார்த்தது போல் தற்போது ஒரு அணியினர் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலை ஆகிய இரு நீதிமன்றங்களில் தமிழரசுக் கட்சியின் மகாநாட்டை நடத்துவதற்கும் கடந்த 21ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானது என்றும் இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியில் 74 வருடங்களுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தல் இறுதியில் அக் கட்சியை நீதி மன்றங்களின் வாசலில் நிறுத்தியுள்ளது.

## குடும்ப தினம்

குடும்பம் என்பது கோவில் போன்றது
குடும்பத் தலைவி ஒளிவிடும் விளக்கு
கடமை தவறாக் கணவன் பூசாரி
குழந்தைகள் உணர்வுள்ள வழிபடும் விக்கிரகம்

பேரன் பேர்த்திகள் வழிபடும் பக்தர்கள்
பேரப் பிள்ளைகள் கோவில் மணிகள்
தாரமாய் மகனால் தத்தெடுத்த காரிகை
தமது பொறுப்பை செவ்வனே செய்வரே!

ஓடியோடி ஓய்விலா உழைத்துக் களைத்தவர்
ஓரிரு நாட்கள் ஓய்ந்திட இயலோர்
கூடிக் களித்துக் கொண்டாட முடியாதார்
குடும்பமாய்த் தங்கி இருக்க வாய்ப்பற்றோர்

உண்ண நேரமும் உறங்கவும் வழியற்றோர்
உற்ற துணையுடன் உறவாட நேரமற்றோர்
வண்ணமாய் வாழ்த்துக் கூறியே கொண்டாடி
வாஞ்சை செலுத்தும் உன்னதத் திருநாளே!

வாங்கிய வீட்டில் வசிக்க நேரமின்றி
வசதியாய்க் கட்டிலில் படுக்க முடியாதோர்
தாங்கிய வீடுவிட்டுத் தனிவீடு சென்றோர்
தொழில் நாடித் தொலைநகர் ஏகினோர்

முதுமை காரணமாய் மூத்தோரகம் அடைந்தோர்
மாமன் மாமிகள் பேரன் பேர்த்திகள்
மதுவும் மாமிசமும் பரிமாறி உண்டே
மகிழ்வுடன் கொண்டாடும் தினமே இந்நாளே!

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844–7453



## இவ்வார ராசிபலன்

(20ம் பக்கத் தொடர்ச்சி)




தனுசு: சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும் வாரம். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பெருமைகள் கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். மனஅமைதி சீர்குலையும். வாகன மாற்றம் உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்ட காலங்கள் மறையும். பணிவும், துணிவும் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். உற்சாகம் களை கட்டும். பொதுவாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிக்கொள்ளும். ஆடை, அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். வங்கி சேமிப்பு உயரும். முற்போக்குச் சிந்தனைகள் உருவாகும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். மங்கல செய்தியால் மனம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டு. பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,G




மகரம்: தேக ஆரோக்கியம் மிளிரும் வாரம். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். படிப்பில் கவனம் வேண்டும். திடீர் பயணம் உண்டு. முதுகில் வலி வந்து நீங்கும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மன பயம் ஏற்படும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புகள் கூடும். வியாபாரம் செழிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் குறையும். விவாக முயற்சி வெற்றி தரும். முத்தான வாய்ப்புகள் பெருகும். ஸ்திர சொத்து சேரும். கனவுகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கல்வி ஈடுபாடு கூடும். கணவனின் அன்பு அதிகரிக்கும். வேண்டாத நபர் விலகுவர். வேலை வாய்ப்பு கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். ஆரோக்கியம் கூடும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். இஷ்ட தெய்வத்தால் கஷ்டங்கள் விலகும். வருமானம் வரும். பூமியால் லாபம் உண்டு. பாதகம் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 7,9,5
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




கும்பம்: வாயில் தேடி வரன் வரும் வாரம். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய் வழி உறவால் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். சாதுர்யமான காலம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். பொருளாதார வளம் மேம்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். விரும்பிய பொருள் கிடைக்கும். வாகனச் செலவுகள் ஏற்படும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து சீராகும். பங்குச்சந்தையில் இலாபம் பெருகும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தடைகள் விலகும். வீண் செலவுகள் அதிகரிக்கும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் தரும். பெற்றோர் நலம் கவனம் தேவை. புதிய பொறுப்பு வரும். செலவு அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் நடைபெறும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,6,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




மீனம்: வெளியூர் பயணம் வெற்றி தரும் வாரம். ஆரோக்கியம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரித்தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேர்க்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கலை ஆர்வம் கூடும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். சிறப்புக்கள் சேரும். போட்டி, பொறாமைகள் விலகும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. தொல்லைகள் அகலும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியாகும். பிரார்த்தனையால் பலன் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். ஆடம்பர சுகங்கள் கூடும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். போதிய வரவு தரும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. தொட்டது துலங்கும். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். இனிப்பானச் செய்தியால் மனம் மகிழும். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் நீங்கும். எண்ணங்கள் மாற்றம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். மருத்துவச் செலவு கூடும். காரிய அனுகூலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,K

# வடக்கின் கல்வி தரத்தை மேலும் வலுப்படுத்த என்னாலான முழுமையான ஒத்துழைப்புகளையும் எந்த வேளையிலும் வழங்க தயாராகவே இருக்கின்றேன்

- அமைச்சர் டக்ளஸ் உறுதி



தேசிய கீதம் பாடப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாணவர்கள் அதன் மீது அதிக-ளவான கவனத்தையும் மரிய-ாதையையும் செலுத்தவது அவசியம் என வலியுறுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசிய கீதம் மற்றும் தேசிய கொடிக்கான மதிப்பு அல்லது முக்கியத்துவம் தொடர்பிலான பார்வை ஒவ்வொருவருக்கும் மன ரீதியாகவும் உடல் ரீதியா-கவும் இருப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யா ஃ அச்சுவேலி புனித திரோச பெண்கள் கல்லூரியில் இடம்பெற்ற பிரிவெனா மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் மற்றும் பாடசாலை சீருடைத் துணிகள் பகிர்ந்தளிக்கும் தேசிய நிகழ்வில் பிரதம விருந்தினராக இன்றையதினம் கடல்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பித்திருந்தார்.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இதன்போது அவர் மேலும் கூறுகையில், பொதுவாக அரசியலோ அன்றி பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அரசியல்வாதிகளின் மனோநிலையிலிருந்து நான் முற்றிலும் வேறுபட்டவராகவே இருக்கின்றேன்.

இதேநேரம் எமது வடக்கு மாகாணத்தின் கல்வி செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கும் அதனை பாதுகாப்பதற்கும் கல்விசார் அதிகாரிகள் அதிகளவான ஊக்குவிப்புகளை வழங்கிவருகின்றனர்.



ஆனாலும் நான் அறிகின்ற வகையில் உயரதிகாரிகளின் இந்த முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்புகள் கிடைப்பதில்லை என தெரியவருகின்றது. இந்த நிலை இல்லாது போக வேண்டும். அத்துடன் குறித்த விடயம் தொடர்பில் நான் கவனத்தில் எடுத்து கொள்வதுடன் வடக்கின் கல்வி தரத்தை மேலும் வலுப்படுத்த என்னாலான முழுமையான ஒத்துழைப்புகளையும் எந்த வேளையிலும் வழங்க தயாராகவே இருக்கின்றேன்.

மேலும் பன்மைத்துவம் சமத்துவம், சம உரிமை போன்றவை கடந்த காலங்களில் கொள்கையளவில் மாத்திரம் இருந்தமை தான் நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு காரணமாக இருந்தது என்பதை சுட்டிக்காட்டியது அமைச்சர், இனிவருங்காலத்தில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

முன்பதாக யாழ் ஃ அச்சுவேலி புனித திரோச பெண்கள் கல்லூரியில் நடைபெறும் இலவச பாடநூல் மற்றும் பாடசாலைச் சீருடை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள சென்றிருந்தஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு



கல்லூரி மாணவ மாணவிகள்ளால் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---------------------------------------

# 'மத்திய அரசிடம் நிதி பெற இணைந்து குரல் கொடுங்கள்' பேரவையில் பழனிசாமிக்கு முதல்வர் அழைப்பு

இந்திய செய்திகள்

'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இந்த ஆண்டு ரூ.11,132 கோடியில் 797 பணிகளை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார். மெட்ரோ ரயில் பணிக்கு மத்திய அரசிடம் நிதி பெறஎங்களுடன் இணைந்து எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமியும் குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று பதில் அளித்தார்.

சென்னை மெட்ரோ ரயில் மற்றும் 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டம் தொடர்பானஎதிர்க்கட்சி தலைவர் பழனிசாமியின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார். அவர் பேசியதாவது:மோனோ ரயிலுக்கு ஆதரவாக கொடி பிடித்தவர்கள் இன்று மெட்ரோ ரயிலுக்கு வந்திருப்பதில் மகிழ்ச்சி. மெட்ரோ ரயில் 2ம் கட்ட பணிகளுக்கு அதிமுக ஆட்சியில்தான் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அதை செயல்படுத்த ஆட்சியில் இருந்த வரை நீங்கள் முனைப்பு காட்டவில்லை. திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், பணி ஆணைகள் வழங்கி, ஒப்பந்தங்கள் மேற்கொண்டு, பணிகள் தொடங்கப்பட்டன.நான் முதல்வர் ஆனது முதல் பிரதமரை சந்தித்த போதெல்லாம், மெட்ரோ ரயில் பணிகளுக்கான நிதி தொடர்பாக கோரிக்கை



வைத்து வருகிறேன்.

6 நாட்களுக்கு முன்புகூட பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். இதற்கான மத்திய அரசின் நிதியை இதுவரை தராததால், மாநில அரசின் நிதியில் இருந்தும், மாநில அரசு வாங்கும் கடனில் இருந்தும் மட்டுமே முழு தொகையும் செலவிடப்பட்டுள்ளது.இதுவரை பாஜகவுடன் கூட்டணியில் இருந்தபோது பேசாமல் இருந்த எதிர்க்கட்சி தலைவர் இப்போதாவது பேசுவது ஆறுதல் தருகிறது. மத்திய அரசிடம் நிதி பெற எங்களுடன் இணைந்து அவர் குரல் கொடுக்க வேண்டும்.முக்கிய கோரிக்கைகள்: அதேபோல, 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின்கீழ் அரசாணை வெளியிடப்பட்டதா, நிதி ஒதுக்கப்பட்டதா என்ற விவரங்களை அவர் கேட்டுள்ளார்.

தங்கள் தொகுதியில் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத 10 முக்கியகோரிக்கைகளை, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்புமாறு அனைத்து எம்எல்ஏக்களுக்கும் கடந்த 2022 ஆகஸ்ட் 22ம் தேதி கடிதம் எழுதினேன்.ரூ.11,132 கோடி: அதன் அடிப்படையில் பெறப்பட்ட பணிகள், எனது தலைமையில் கடந்த 2023 அக்டோபர் 7ம்தேதி நடந்த உயர்நிலை குழுகூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் 234 சட்டப்பேரவை தொகுதிகளிலும் ரூ.11,132 கோடியில் 797 பணிகளை செயல்படுத்த அனுமதிவழங்கப்பட்டது.

அதில் 582 பணிகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு, அதில், 63 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடந்து வருகின்றன. மற்ற பணிகளுக்கு உரிய ஆணைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிர்க்கட்சி தலைவர் தனது தொகுதி தொடர்பாக அளித்ததில்,நடப்பு ஆண்டில் 5 கோரிக்கைகள் எடுக்கப்பட்டு, அதில் 3 கோரிக்கைக்கு உரிய உத்தரவுகள் வெளியிடப்பட்டது. அதில் ஒருபணி முடிக்கப்பட்டு, 2 பணிகள் நடந்து வருகின்றன. எஞ்சிய 2 பணிகளுக்கு அரசாணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.

# தேர்தல் பத்திரம் திட்டம் சட்டவிரோதமானது: உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு அதிரடி தீர்ப்பு



தேர்தல் பத்திர முறை சட்டவிரோதமானது எனக் கூறி அவற்றை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் தேர்தல் பத்திரங்கள் வழங்குவதை வங்கிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களது உத்தரவில் தெரிவித்துள்ளனர். தேர்தல் பத்திர முறையில் வெளிப்படைத்தன்மை இல்லை என தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு இந்த உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. மேலும் அந்த உத்தரவில், "தேர்தல் பத்திர முறை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது. தேர்தல் பத்திர நன்கொடைக்காக கம்பெனிகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டது சட்டவிரோதம்.

தற்போதைய விதிகளின்கீழ் தேர்தல் பத்திர முறை சட்டவிரோதமாக உள்ளது.தேர்தல் பத்திர முறை, தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் அரசியல் சாசன பிரிவு 19(1) ஆகியவற்றை மீறும் வகையில் உள்ளது. தேர்தல் பத்திர முறை திட்டத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை என்றால் அதனை ரத்து செய்யலாம். கார்ப்பரேட் நிறுவனங்கள் கட்சிகளுக்கு நிதி தரும்போது அதற்கு கைமாறு எதிர்பார்க்க வாய்ப்பு உள்ளது. கறுப்பு பணத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்தை அடைய தேர்தல் பத்திரங்களைத் தவிர வேறு வழிகள் உள்ளன. அரசிடம் கணக்கு கேட்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது என்பதை பல தருணங்களில் நீதிமன்றங்கள் சொல்லியுள்ளன. நன்கொடை தருவோர் குறித்த விவரங்களை தெரிவிக்கத் தேவையில்லை என்பது வாக்காளர்களின் உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது.

எனவே, தேர்தல் நன்கொடை அளிக்க வகை செய்த வருமான வரி திருத்தச் சட்டம், மக்கள் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டம் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திர முறை தொடர்பான மற்ற சட்டத் திருத்த மசோதாக்களும் ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திரம் சட்டம் மட்டுமின்றி, கம்பெனி சட்டத் திருத்த மசோதாவும் ரத்து செய்யப்படுகிறது.தேர்தல் பத்திர நிதி விவரங்களை வழங்காமல் இருப்பதற்கு உரிய காரணம் தெரிவிக்கப்படவில்லை. 2019ம் ஆண்டு முதல் தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளித்தோர் விவரங்களை எஸ்பிஐ வங்கி வெளியிட வேண்டும். தேர்தல் பத்திரங்கள் மூலம் வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்பின் விவரங்களை மார்ச் 6க்குள் வழங்க வேண்டும். அதேபோல், நன்கொடை கொடுத்தோர் குறித்த விவரங்களை தேர்தல் ஆணைய இணையதளத்தில் ஏப்ரல் 13ம் தேதிக்குள் வெளியிட வேண்டும்'' இவ்வாறு நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

வழக்கின் பின்னணி: கடந்த 201718 ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் தேர்தல் பத்திரம் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டம் கடந்த 2018 ம் ஆண்டில் அமலுக்கு வந்தது. இதன்படி பாரத ஸ்டேட் வங்கியின் சார்பில் ரூ.1,000, ரூ.10,000, ரூ.1 லட்சம், ரூ.10 லட்சம், ரூ.1 கோடி மதிப்பில் தேர்தல் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில் ஸ்டேட் வங்கியின் குறிப்பிட்ட வங்கி கிளைகளில் தேர்தல் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும். பொதுவாக ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் வழங்கப்படும். எனினும் தேர்தல் காலத்தில் மட்டும் ஒரு மாதத்தில் 30 நாட்கள் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும்.தனிநபர்கள், நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்களை வாங்கி தங்களுக்கு விருப்பமான அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக வழங்கலாம்.

ஒரு நபர், நிறுவனம் எத்தனை பத்திரங்களை வேண்டுமானாலும் வாங்கலாம். இந்த பத்திரங்களில் வாங்குபவரின் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்கள் இருக்காது. 15 நாட்களுக்குள் பத்திரத்தை பணமாக மாற்ற வேண்டும். இல்லையெனில் தேர்தல் பத்திரங்களின் தொகை பிரதமர் நிவாரண நிதியில் டெபாசிட் செய்யப்படும். தேர்தல் பத்திரம் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.இந்த திட்டத்தை ரத்து செய்யக் கோரி ஏடிஆர், காமன் கேஸ் உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் 4 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

கடந்த 6 ஆண்டுகளாக விசாரணை நீடித்தது. கடந்த ஆண்டு முதல் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா அடங்கிய அமர்வு வழக்கை விசாரித்து வந்தது.

# நீர்நிலையில் கட்டிடம் கட்டுவது தொடர்கிறது: பசுமை தாயகம் தலைவர் சவுமியா அன்புமணி வேதனை

மக்கள் தொகை பெருக்கம் காரணமாக சென்னையில் நீர்நிலைப் பகுதிகளில் கட்டிடங்கள் கட்டும் நிலை தொடர்ந்து வருவதாக பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி தெரிவித்தார். கேர் எர்த் டிரஸ்ட் மற்றும் நாட்வெஸ்ட் குழு சார்பில் 'சென்னையில் காலநிலை மாற்றம் மற்றும் தண்ணீர் சிக்கலுக்கான செயல் திட்டம்'என்ற தலைப்பில் சென்னையில் நேற்று கருத்தரங்கம் நடைபெற்றது.கேர் எர்த் டிரஸ்ட் மூத்த ஆலோசகர் எஸ்.பாலாஜி வரவேற்புரை ஆற்றினார்.

கருத்தரங்கின் செயல் திட்டத்தை சிறப்பு விருந்தினர்களான மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத் தலைவர் என்.கிருஷ்ணகுமார் மற்றும் பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி ஆகியோர் வெளியிட்டனர்.கருத்தரங்கில் கிருஷ்ணகுமார் பேசும்போது,''காலநிலை மாற்றத்தால் சென்னையில் அடுத்த 20, 30 ஆண்டுகளில் பல்வேறு பாதிப்புகள் உருவாகக்கூடும். குறிப்பாக தண்ணீர் பாதுகாப்பு மிகவும் முக்கியமாக உள்ளது. கோடை காலங்களில் அதிக வெப்பமும், மழைக் காலங்களில் அதிக மழையும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படுகிறது.

அதற்கேற்ப நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்''என்றார்.பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி பேசியதாவது: நகரங்களில் அதிக மக்கள் வசிப்பதால் நீர்மேலாண்மை முக்கியமானது. நீர் மேலாண்மையை வைத்துதான் ஒரு சிறந்த நகரத்தை அடையாளப்படுத்த முடியும். சென்னையின் நீர்நிலைகளான கூவம், அடையாறு, கொசஸ்தலை உள்ளிட்ட ஆறுகளை தூய்மைப்படுத்தி குடிநீர் ஆதாரங்களாக மாற்ற வேண்டும்.கோயம்பேடு பேருந்து நிலையம் 30 ஏக்கருக்கும் மேல் பரப்பளவு கொண்டது. அதில் பூங்காஅமைப்பதால் ஆயிரக்கணக்கான மரங்களை வைக்க முடியும். மேலும் மக்கள் கூடும் இடமாகவும், மக்களின் மன அழுத்தத்தை போக்கும் இடமாகவும் அந்த பூங்கா அமையும்.மக்கள்தொகை பெருக்கம் காரணமாக சென்னையில் ஏரி நிலங்களில் வீடு கட்டக்கூடிய சூழல் தற்போதும் நிலவி வருகிறது. அதேபோல, சில கிராமங்களில் தண்ணீர் பற்றாக்குறையால் வாழ்வாதாரத்துக்காக அகதிகளாக மக்கள் இடம்பெயர்கின்றனர். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
-Loans
-Cash
-Debt Consolidation
-1st & 2nd Mortgage
-Home Renovation Loan
-Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
உதயம் 1454 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 16, 2024

# ஸ்காபுறோ ஜெய் ஸ்ரீ சீரடி சாய் பாபா சமஸ்த்தானம் வழங்கிய ‘மகிமைப் பெருவிழா – 2024’





ஸ்காபுறோ நகரில் எக்ளிங்டன் வீதி-மின்லன்ட் வீதி சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள ஜெய் ஸ்ரீ சீரடி சாய் பாபா சமஸ்த்தானம் 10வது ஆண்டாக வழங்கிய ‘மகிமைப் பெருவிழா-2024’ கடந்த 10ம் திகதி சனிக்கிழமை மாலை சீனக் கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஆரம்பத்தில் பகவான் சீரடி சாய் பாபா அவர்களின் திரு-வுருவச் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மேடையில் வைக்கப்பெற்று பூசைகளும் வழிபாடுகளும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து சமஸ்த்தானத்தின் ஸ்தாபகர் சசிகலா நரேந்திரா அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மேற்படி விழா ஒரு முழுமையானதும் பக்தி சார்ந்ததாகசுவும் இறுதிவரை நகர்ந்து சென்றது என்றால் மிகையாகாது.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டுள்ளது.
(படங்கள்: ஐயா4யு)



# தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையால் இனிய நந்தவனம் பதிப்பகத்திற்கு சிறந்த பதிப்பகத்திற்கான பரிசு

தமிழ் நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த நூலுக்கும், நூலை வெளியிட்ட பதிப்பகத்திற்கு பரிசுச்சான்றிதழும் பொற்கிழியும் வழங்கப்படுகிறது
2020-2021 ஆண்டுக்கான சிறந்த கட்டுரை நூல் வரிசையில் இனிய நந்தவனம் பதிப்பகம் வெளியிட்டுள்ள நுண்ணுயிர் எதிரி என்ற நூலை எழுதிய கு.நிந்தியானந்தனுக்கு சிறந்த நூலுக்கான பரிசுச் சான்றிதழும் ரூ 30,000 பரிசுத்தொகையும். பதிப்பாசிரியர் நந்தவனம் சந்திரசேகரனுக்கு ரூ 10,000 , பரிசுத் தொகையும் சிறந்த பதிப்பகத்திற்கான சான்றிதழும்வழங்கப்பட்டது
தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித் துறை செயலாளர் இரா.செல்வராஜ் இ.ஆ.ப முன்னிலையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பரிசினை வழங்கினார்.



# இலங்கை தமிழரசு கட்சியின் மாநாடு மற்றும் தலைவர்தேர்வு ஆகியவற்றிற்கு இரண்டு வாரங்களுக்கு இடைக்காலத் தடை

## திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் கட்டளை

(நடராசா லோகதயாளன்)




இலங்கை தமிழரசு கட்சியின் 19 ஆம் திகதிய மாநாடு மற்றும் தலைவர்தேர்வு உள்ளிட்டவற்றிற்கு இரண்டு வாரங்களுக்கு இம்மாநாட்டை நடாத்த வேண்டாம் என திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் 15-02-2024 அன்று இடைக்கால தடை விதித்து கட்டானையொன்றினை பிறப்பித்துள்ளது. திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இன்றைய தினம் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 14 நாட்களுக்கு செயற்படும் வகையில் மேற் குறித்த இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
(உள்ளே செய்தி 15ம் பக்கத்தில்)

# 74 வருடங்களின் பின் தமிழரசுக் கட்சிக்குள் வலுத்துள்ள ஆதிக்கப் பனிப்போர்

## வி.தேவராஜ் – மூத்த ஊடகவியலாளர்



தமிழரசுக் கட்சியின் 74 வருடகால வரலாற்றில் முதன்முறையாக கட்சியின் தலைவருக்கான தேர்தல் நடந்து முடிந்துள்ளது. மழை விட்டாலும் தூவானம் தொடர்வது போல் தமிழரசுக் கட்சியின் நியமனங்கள் குறித்து இன்றும் பேசு பொருளாகவே உள்ளது. இந்த விடயம் தமிழர் தரப்பில் மாத்திரமல்ல தென்னிலங்கை ஊடகங்களிலும் பேசு பொருளாக உள்ளது.
தமிழரசுக் கட்சிக்குள இன்று நிலவுகின்ற பனிப்போர் யார் தமிழரசுக் கட்சியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பது குறித்தாகவே உள்ளது. தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறீதரன் அணியினரும் தலைவருக்கான தேர்தலில் தோற்றுப்போன சுமந்திரன் அணியினரும் களத்தில் நிற்கின்றனர்.
(உள்ளே செய்தி 18ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker

# இலங்கை இராணுவ எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டார்



இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதி மாதங்களில் யுத்த சூனிய பகுதிக்குள் இலங்கை இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டர்.
போர்க்காலச் சூழ்நிலைகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்களில் ஒருவராக அறியப்படும் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அந்த கட்சியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சரவதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
For Tickets and Information:
416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave,
Scarborough, ON M1S 4A4
26th May, 2024
Sunday,
at 6.00 PM